# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௩௩ | திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௯<br>ஏவிளம்பி, பங்குனி<br>1958 மார்ச்சு, ஏப்ரல். | மலர் ௧௨ |
|---|---|---|

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின்

## முதல் இராசேந்திர சோழன் செப்பேடுகள்.

(முற்றொடர்ச்சி துணர் ௩௩. மலர் ௧௧. பக். 324)

### ஏடு ௭. பக்கம்—௧.

க்கீழ் நான்குமா நீக்கி நிலன் முப்பத்தொன்பதே முக்காலே மூன்றுமா முக்காணியரைக்காணி முந்திரிகைக்கீழ் எட்டு | மா முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மாவினால் நெல்லு ஆயிரத்தெழு நூற்றைம்பதின் கலமு | ம் மீன்பாட்டங்காசு ஒன்றும் ஏறுபாடி அளந்தபடி நிலன் இருபத்திரண்டே முக்காலே காணியரை | க் காணி கீழரையேமும்மாவரை முந்திரிகைக் கீழரையே இரண்டு மாவினால் நெல்லு நானூ | ற்றுக்கலமும் புளிகைக்குடி அளந்தபடி நிலன் முப்பத்தெட்டே முக்காலே மும்மாவரை அரைக் | காணிக் கீழரையே மூன்றுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவி லும்இவ்வூர் விஷ்ணுக்க | ள் ஸ்ரீ வைகுந்தமுடையார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் இத்தேவரிதே தெங்குமாவுமாவும் உள்ள நந்த | வானமும் நீர்நிலை ஓடையுமாக நிலன் அரையே அரைக்காணி முந்திரிகைக்கீழரையே நான்கு மா | க்காணி அரைக்காணிக் கீழ் எட்டுமாநீக்கி நிலன் முப்பத்தெட்டே எழுமாவரைக்கீழ் முக் காலே மூன் | றுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவினால் நெல்லு ஆயிரத்திருநூற்றுக் கல | மும் பெருங்குடி அளந்தபடி நிலன் முப்பத்தொன்றே முக்காலேகாணிக்கீழ் முக்காலே | நான்குமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிலும் இவ்வூர் ஐயன்கோயி | லும் திருமுற்றமும் இவ்வூர் பிடாரி கோயிலும் திருமுற்றமும் இப்பிடாரியார் நந்தவான | மும் கம்மாளச்சேரியும் பறைச்சேரியுமாக நிலன் ஒருமா முக்காணி முந்திரிகைக்கீழி ரண்டு | மாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா நீக்கி நிலன் முப்பத்தொன்றரையே மூன்று மா | க்காணி யரைக்காணி முந்திரி கைக்கீழ் முக்காலே ஒருமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவி னால் நெல்லு | அறுநூற்றுக்கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் முண்டனூர் அளந்தபடி நிலன் இருபத்தொன்பத | ரையே நான்

மாவரைக்கீழ் எட்டுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமா விலும் இவ்வூர் நிலத்தை ஊ | டறுத்துப்போன கரு வாய்க்காலான மும்முடிசோழப் பேராற்றல் நிலன் மூன்று மாக்காணி யரைக்காணி | க்கீழ் அரையே நான்கு மாக்காணி அரைக்காணிக்கீழெட்டுமாநீக்கி நிலன் இருபத் தொன்பதரையே | ஒருமா முந்திரிகைக் கீழரையே மூன்றுமா முக் காணிக்கீழ் முக்காலே ஒருமாவினுல் நெல்லு அறுநூற்று | க் கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் தாமோதரநல்லூர் அளந்தபடி நிலன் இருபத்தாறே ஒருமாவ | ரைக்கீழ் மூன்றுமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்குமாவிலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத் துப் | போன சோற்றுத்துறை வாய்க்காலால் நிலன் முக்காணி அரைக்காணிக்கீழெட்டுமாநீக்கி நிலன் இருபத்

ஏடு எ. பக்கம் உ.

தாறே அரைமா முந்திரிகைக்கீழ் முக்காலே அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் நெல் | லு முன்னூற்றுக் கலமும் மீன்பாட்டம் அக்கம் இரண்டும் அரசூர் அளந்தபடி நிலன் முப்பத்து மூன்றே | அறுமாவரைக்கீழரையே காணி யரைக்காணிக்கீழெட்டு மாவினுல் நெல்லு நானூற்றுக் கலமும் மீ | ன்பாட்டம் அக்கம் மூன்றும் வாளுவநல்லூர ளந்தபடி நிலன் இருபத்தெழுமாவரை முந்திரிகைக்கீழ | ரையினுல் நெல்லு அறுநூற்றுக் கலமும் மீன்பாட்டங்காசு ஒன்றும் குணசீலநல்லூர் அளந்தபடி நிலன் | இருபத்துநாலே நான் | மாவரை முந்திரிகைக்கீழ் ஒன்பதுமாவரை முந்திரிகைக் கீழரையே இரண்டு மா | வினுல் நெல்லு ஐஞ்ஞூற்றுக்கலமும் மீன்பாட்டம்அக்க மாறும் செய்யாநல்லூர் அளந்தபடி நிலன் | இருபத்து நாலரையே நான்மாவரையரைக்கரணி முந்திரிகைக் கீழ் எழுமாவரை முந்திரிகைக்கீழரை | யே இரண்டுமாவிலும் இவ்வூர் குளமும் கரையும் நிலன் கால்நீக்கி நிலன் இருபத்துநாலே ஒன் | பதுமாவரையரைக்காணி முந்திரிகைக்கீழெழுமா வரை முந்திரிகைக்கீழரையே | இரண்டுமாவினுல் நெல்லு ஆயிரத் தொருநூற்றுக்கலமும் மீன்பாட்டம் அக்கம் ஆறும் | சிற்றுலி நல்லூர் அளந்தபடி நிலன் இருபத்தைஞ்சே முக்காலே இருமா வரையரைக்காணிக்கீ | ழ் மும்மாவரை முந்திரிகைக்கீழரையே யிரண்டுமாவிலும் இவ்வூர் குளமும் கரையும் | இவ்வூர் ஐயன் கோயிலும் திருமுற்றமும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன சுந்தர | சோழன் வாய்க்காலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் போய் துளாருக்குப்பாயும் வாய் | க்காலுமாக நிலன் நாலுமா வின்கீழ் முக்காலே ஒருமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமா நீக்கி | நிலன் இருபத்தஞ்சரையே மும்மாவரை முந்திரி கைக்கீ

ழாறுமா முக்காணிக்கீழ் முக்காலே ஒருமாவினு | ல் நெல் ஆயிரக்கலமும் மீன்பாட்டங்காசொன்றும் நித்தவினோதநல்லூர ளந்தபடி நிலன் இருபத்து | மூவேலியிலும் ஊரிருக்கை நத்தம் நிலன் மூவேலி நீக்கி நிலன் இருபதிற்று வேலியினுல் நெல்லு | ஆயிரக்கலமும் பெருங்குடி அளந்தபடி நிலன் முப்பதேயெழுமா வரையின்கீழ் நாலுமாக்காணிய | ரைக்காணிக்கீழெட்டுமாவினுல் நெல்லுத் தொளாயிரக் கலமும் மீன்பாட்டம் அக்கநாலும் நியா யந | டை நல்லூர் அளந்தபடி நிலன் இருபத்திரண்டே காலே காணி அரைக்காணிக்கீழ் நாலுமா முக்காணி | க்கீழ் முக்காலே யொருமாவினுல் நெல்லு ஆயிரக்கலமும் மீன்பாட்டம் காசுமூன் றும் சேந்தமங்க | லம் அளந்தபடி நிலன் பதினொன்றரையே மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ்க்காலே அரைமா |

ஏடு. அ. பக்கம்—க.

நெல்லு நூற்றைம்பதின் கலமும் வெண்ணி கணிமுற்றூட்டு இறங்கல் அளந்தபடி நி | லன் மூன்றரையே நான்குமாக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு மாவினுல் நெல்லு ஐம்பதின்கல | மும் நெடுங்கணக்குடி அளந்தபடி நிலன் பதின்மூன்றேய் மூன்றுமா முக்காணிக்கீழ் முக்காலே இரண் | டு மாக்காணி யரைக்காணிக் கீழெட்டுமாவிலும் இவ்வூர் குளங்களும் ஊர் நத்தங்களும் அய்யன் கோயி | லும் சுடுகாடும் நிலன் நான்குமா வரைக்காணிக் கீழ் முக்காலேயரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு | மாநீக்கி நிலன் பன்னிரண்டே முக்காலே நான்மாவரையரைக்காணிக்கீழ் இரண்டுமாவரைக்காணி மு | ந்திரிகைக்கீழ் நான்குமாவினுல் நெல்லு இருநூற்றைம்பதின் கலமும் பூதமங்கலத்து பாலய | லூட்டி காணி அளந்தபடி நிலன் ஏழே நான்குமாவரைக்காணி முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமா முக் | காணிக்கீழ் முக் காலே ஒருமாவிலும் இவ்வூரோடையும் கரையும் நிலன் நான்குமா முக்காணி முந் | திரிகைக்கீழ்க்காலே யரைமா முந்திரிகைக் கீழரையே இரண்டுமா நீக்கி நிலன் ஆறே | முக்காலே நான்கு மாக்காணி அரைக்காணிக்கீழ் எழுமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நான் | குமாவினுல் நெல்லு ஐம்பதின்கலமும் பள்ளிச்சந்தம் இறங்கின ஸ்ரீ கரண மங்கலமான | கொட்டாரக்குடி பள்ளி அளந்தபடி நிலன் நாற்பத்தைஞ்சே மும்மாவரையரைக்காணி முந்திரி | கைக்கீழரையேயரைமா முந்திரிகைக்கீழரையே இரண்டு மாவிலும் இவ்வூர் நிலத்தை ஊ | டறுத்துப்போன புல்வெள்ளூர் வாய்க்காலாலும் இவ்வூர் நிலத்தை ஊடறுத்துப்போன|பூவணூர் வாய்க்காலாலும் இவ்வூர் நத்தமும் குளமும் ஐயன் கோயிலும் பறைச்சேரியுமாக நிலன் | இரண்டரையே நான்குமாக்காணி முந்திரிகைக்கீழரையே இரண்டுமா நீக்கி நிலன் நாற்பத்திரண்ட

ரை | யே மூன்றுமாக்காணி முந்திரிகைக்கீழ் முக்காலே மும்மா வரை முந்திரிகைக்கீழரையே இரண்டுமாவினு | ல் நெல்லு முந் நூற்றைம்பதின் கலமும் மீன்பாட்டங்காசரையும் புறக்குடி யளந்தபடி நிலன் பன்னிர | ண்டேகாலே முந்திரிகைக்கீழ் காலே முந்திரிகைக் கீழரையேயிரண்டு மாவிலும் ஊர்நத்தம் நில | ன் ஒருமாவரை அரைக்காணி முந்திரிகைக்கீழரையே யொருமா வரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்கு | மா நீக்கி நிலன் பன்னி ரண்டே மூன்றுமாக்காணி முந்திரிகைக்கீழரையே மூன்றுமா முக் காணிஅரைக் | காணிக்கீழ் எட்டுமாவினுல் நெல்லு முந்நூற்றுக் கலமும் ஆக இவ்வூர்கள் வெவ்வேறு முதலும் பழ | ம்பியரும் [1] யாண்டு எட்டாவது முதல் தவிர்ந்து ஓருராய் அளந்தபடி நிலன் மூவாயிரத்தொருநூற்று

ஏடு. அ. பக்கம்—உ.

முப்பத்தைஞ்சே நான்மாவரை முந்திரிகைக்கீழ் முக்காலே இரண்டுமா முக்காணியரைக்காணி | க்கீழ் எழுமாமுக்காணி யிலும் ஊர்நத்தங்களும் மாதேவர் ஸ்ரீ கோயில்களும் திருமுற்றங் களும் | விஷ்ணுக்கள் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் கணபதியார் ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் ஐயன் கோயில்க | ளும் திருமுற்றங் களும் பிடாரிகோயில்களும் திருமுற்றங்களும் இத்தேவர் நந்த வானங்களும் இத் | தேவர் தெங்குமாவும் உள்ள நந்தவானங் களும் கம்மாளச் சேரிகளும் பறைச்சேரிகளும் சுடுகா | டும் குளங்களும் கரைகளும் திரிபுவனமகாதேவிப் பேரேரியும் கரையும் புறவூர்களுக்கு நீர்பாயப்|போன சுந்தரசோழன் வாய்க்காலும் சிங் களாந்தகன் வாய்க்காலும் கருவாய்க்காலான மும்முடிச்சோழ | பேராரும் காமபதாகை வாய்க்காலும் வெண்ணிநின்றும் ஓடின நீரோடுகாலும் உள்ளிட்ட வாறு | களாலும் வாய்க்கால்களாலும் நீர்நிலை ஓடையாலும் ஆக நீங்கும் நிலன் அறுநூற்றிருபத் | தொன்பதே ஆறுமாக்காணி முந்திரிகைக்கீழ் மாகாணிமுந்திரி கைக்கீழ் முக்காலே மு 1 க்காணி நீக்கி நிலன் இரண்டாயிரத்தைஞ் ஞூற்றிருபத்தஞ்சேமுக்காலே மூன்றுமா | க்காணிக்கீழ் முக் காலேயொருமாவரைக்கீழரையே இரண்டுமாவினுல் நெல்லு ஐம்பத் | தோராயிரத்து ஐம்பதின் கலமும் மீன்பாட்டங்காசு முப்பத்திரண்டரையும் அக்கம் ஆறு(ம்) | நித்தவிநோத வள நாட்டு வீரசோழ வளநாட்டுத் திரிபுவனமகாதேவிச் சதுர்வேதி மங்கலமெ | ன்னும் பியரால் [2] யாண்டு எட்டாவது முதல் பிர்மதேயமாய் இவ்வூர் இறைகட்டின இறையிலி யாண் | டு எட்டாவது நாலு கூறிட்ட ஒரு கூறும் இதன் எதிராமாண்டு

1. பழம்பெயரும் என்பதன் மரூஉ.
2. பெயரால்.

(தொடரும்)

# அறப்போர் புரிந்த அரசர்கள்.

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

சாமி. சிதம்பரனூர்.

பழந்தமிழ் நாட்டிலே எப்பொழுதும் அமைதி குடிகொண்டிருந்தது என்று கூறமுடியாது. பழந்தமிழ் வேந்தர்கள் அமைதியுடன் வாழ்ந்தனர் என்று சொல்லவும் முடியாது. அவர்கள் அடிக்கடி போர் புரிந்துகொண்டிருந்தனர். முடியுடை வேந்தர்கள் மூவரும் ஒற்றுமையுடன் உறைந்தகாலம் குறைவுதான்; போரிட்டுப் பொழுதுபோக்கிய காலந்தான் மிகுதி.

இவ்வாறு எண்ணும்படிதான் புறப்பொருள் இலக்கியங்கள் இருக்கின்றன. புறநானூறும், பதிற்றுப்பத்தும் தமிழ் வேந்தர்களின் வீரத்தைப் போற்றும் நூல்கள். அவர்கள் தம் போர் வெற்றியைப் புகழ்ந்து பேசும் பாடல்களே அவற்றுள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

அவர்கள் புரிந்த போர்கள் பெரும்பாலும் அநீதியை எதிர்த்துச்செய்த போர்களாகத் தான் காணப்படுகின்றன. மக்கள் நன்மையைக் குறிக்கோளாகக்கொண்டு புரிந்த போர்களாகத்தான் காட்சி அளிக்கின்றன. நாட்டாசையினாலும், புகழ்விருப்பாலும் புரிந்த போர்களும் உண்டு. போர் தோன்றுவதற்கு ஏதாவது காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணம் அறத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருக்கலாம்; அல்லாதவைகளை அடிப்படையாகக் கொண்டதாவும் இருக்கலாம்.

பழந்தமிழ் மன்னர்கள் புரிந்த போர்களிலே பெரும்பாலானவை அறத்தை அடிப்படையாகக் கொண்டவை; சிறுபான்மையே அல்லாதவைகளை அடிப்படையாகக்கொண்டவை.

## போரால் நாசம்.

பண்டைக்காலப் போர்களிலே நாட்டின் செல்வங்களுக்கு நாசம் நேர்ந்தன. மக்களால் உழைத்துச் சேர்த்த பண்டங்கள் பாழாக்கப்பட்டன. நாடு நகரங்கள் அழிக்கப்பட்டன. போரினால் இந்தக்காலத்தில் ஏற்படும் நாசம் போலவே அந்தக் காலத்திலும் ஏற்பட்டன என்பதில் ஐயம் இல்லை. இதனை

வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறித்த லானே. (புறம் 6)

என்ற பகுதியாற் காணலாம். "இறைவனே நீ அணிந்திருக்கும் மலர்மாலை பகைவர்களின் நாடுகளைச் சுட்டெரிப்பதனால் எழும் புகை வீசுவதனால் வாடுவதாக. வேறொன்றினாலும் வாடுவதில்லை" என்பதே இதன் பொருள். இது பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியது. இதனால் பண்டைக் காலப் போரினால் நாடு நகரங்கள் பாழ்பட்டமை காணலாம். நாடு நகரங்கள் தீக்கிரையாகும்போது பண்டங்கள் எல்லாம் பாழாகும் என்பதிலும் ஐயம் இல்லை.

வென்ற மன்னர்கள், தோற்ற மன்னர்களின் கோட்டைகளைச் சிதைப்பார்கள். மாட மாளிகைகளை இடித்துத் தரைமட்டமாக்குவார்கள். மாட மாளிகைகள் இருந்த இடங்கள் எல்லாம் கழுதைகள் மேயும் குட்டிச்சுவர்களாகிவிடும். அந்த இடங்கள் கழுதைகள் பூட்டிய ஏரால் உழப்படும்.

நல்ல வளம் பொருந்திய வயல்கள் எல்லாம் பாழாக்கப்படும்; நீர் நிறைந்த நஞ்சை நிலங்கள் எல்லாம் குதிரைகள் பூட்டிய தேரோடும் இடங்களாக்கப்படும்.

போரால் இத்தகைய நாசங்கள் நிகழும். பகைவர்மேல் ஆத்திரங்கொண்ட மன்னர்கள் இவ்வாறு செய்வார்கள். வெற்றி வெறி இத்தகைய நாசவேலைகளையெல்லாம் செய்யத்தூண்டும்.

"கடுந்தேர் குழித்த ஞெள்ளல் ஆங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்;
புள்ளினம் இமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம்பு உகளத்
தேர்வழங் கினைநின் தெவ்வர் தேஎத்து".

விரைந்து செல்லும் உன்னுடைய தேர்களால் தெருவிலே குழி விழுந்து சேறாகிவிடும். அந்தப் பள்ளங்களிலே வெண்மையான வாயையுடைய அற்பமான கழுதைகளை ஏரிலே பூட்டி ஓட்டுவாய். இவ்வாறு எதிரிகளின் கோட்டைகளைப் பாழ்படுத்தினாய். உன்னுடைய பகைவர் நாட்டிலே பறவைக் கூட்டங்கள் நிறைந்திருக்கின்ற சிறந்த விளைநிலங்களை யெல்லாம் பாழ்படுத்தினை, அவ்விளை வயல்களிலே வெண்மையான பிடரிமயிரையும், செருக்கையும் உடைய குதிரைகளின் குளம்புகள் துவைக்கும்படி உனது தேர்களை ஓட்டினை". (புறம் 15.)

இதுவும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பற்றிய பாடல்.

## போர் அறம்.

பண்டைக்காலத்தில் இக்காலத்தைப்போலவே போரினால் நாட்டுக்குக் கேடு விளைந்தது என்பதில் ஐயம் இல்லை. ஆனால் ஒன்று; பண்டங்கள் பாழாயினவேயன்றிப் பொதுமக்கள் உயிரை அவர்கள் பாழ்படுத்தவில்லை. போர்முனையில் நிற்போர்தான் உயிரிழந்தனர். போர்முனைக்குத் தகுதியற்றவர்கள் பாதுகாக்கப் பட்டனர். போரை விரும்பாத மக்களும் தப்பித்துக்கொள்ள லாம். இந்த அறத்தைத் தமிழ் மன்னர்கள் பின்பற்றிவந்தனர்.

போர் தொடங்குவதற்கு முன்பே அவர்கள் பொதுமக்களுக்கு அறிவித்துவிடுவார்கள். அவர்கள் போர் நிகழும் இடத்திலிருந்து வெளியேறுவதற்குக் காலங்கொடுப்பார்கள். அவர்கள் வெளியேறிய பின்பே போர் தொடுப்பார்கள். இதுதான் சிறந்த 'யுத்த தர்மம்' ஆகும்.

"ஆவும், ஆன்இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும், நும்அரண் சேர்மின்"

பசுவும், பசுக்களின் தன்மையையுடைய பார்ப்பனர்களும், பெண்களும், நோயாளிகளும், முன்னோர் முறையைப் பாதுகாத்து, பிதுர் உலகில் வாழ்வோர்க்கு அரிய கடன்களைச் செய்வதற்குரிய புதல்வரைப் பெறாதவர்களும் வெளியேறிவிடுங்கள். விரைவிலே எமது கணையைத்தொடுத்துவிட்டுப் போர்செய்யப்போகின்றோம். ஆதலால் உங்கள் உயிருக்குக் கேடு நேராமல் பாதுகாப்பான இடத்தைத் தேடிக்கொண்டு போய்விடுங்கள்". இவ்வாறு போர் தொடங்குமுன் அறிவிப்பார்கள். (புறம் 9.)

இதுதான் தமிழர் பின்பற்றிவந்த போர் அறம். தமிழ் மன்னர்கள் இந்த அறத்தைப் பின்பற்றியே போர் புரிந்து வந்தனர். இக்காலத்திலே போர் நிகழ்ந்தால், படை வீரர்களின் உயிரைவிடப் பொதுமக்களின் உயிர்களே மிகுதியாகக் கொள்ளை கொள்ளப்படுகின்றன. அமைதியான வாழ்வை விரும்பும் பொது மக்களை அழிக்கும் படை வகைகளே இக்காலத்திலே மிகுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இது மறப்போருக்கே அடிப் படை. போரிலே தோற்றுப்போன நாட்டை மீண்டும் தலை தூக்கவிடாதபடி நசுக்குவதே இக்காலப் போர் வெறியர்களின் மனப்பான்மை. பண்டைத் தமிழ் மன்னர்களின் தன்மை இதற்கு மாறானது. பகைவரிடம் கவர்ந்த நாட்டையும் தம் நாடு போலவே பாதுகாப்பார்கள்.

"அகநாடு புகுந்துஅவர் அருப்பம் வெளவி,
யாண்டுபல கழிய வேண்டுபுலத்து இறுத்து,
மேம்பட மரீஇய வெல்போர்க் குரிசில்"

'பகைவர்களுடைய நாடுகளிலே புகுந்து அவர்களுடைய அரண் களைப் பிடித்துக்கொள்ளுவாய். நீ கைப்பற்றிய அப்பகைவர்க ளின் நாடுகளிலே பல்லாண்டுகள் தங்கியிருப்பாய். போரினால் பாழ்பட்ட அந்நாடுகள் வளம்பெற்று வாழ்வதற்கான சீர்திருத் தங்களைச் செய்வாய். இத்தகைய பெருமையும் 'போர் வல்லமை யும் பொருந்தியவனே' (மதுரைக்காஞ்சி 149-151) என்று பாண்டிய மன்னன் பாராட்டப்படுகின்றான். இதனால், அக் காலத்து மன்னர்கள் எந்த நாட்டு மக்களிடமும் வெறுப்புக் கொண்டவர்கள் அல்லர் என்பதைக் காணலாம்.

## தோற்றோரைத் துன்புறுத்தார்.

பண்டைத் தமிழ் வேந்தர்களிடம் மற்றொரு சிறந்த அறம் குடிகொண்டிருந்தது. அவர்கள் தோற்றுப்போனவர்களைத் துன்புறுத்துவது அறம் அன்று என எண்ணினர். போரிலே அஞ்சி ஓடுகின்றவர்களை விரட்டிப் பிடிக்கமாட்டார்கள். தோற் றுப்போனவர்களைச் சிறையிலே பிடித்துவைத்துத் துன்புறுத்த மாட்டார்கள். இப்படிச் செய்வது வீரத்திற்கு—வெற்றிக்கு— ஆண்மைக்கு—அழகன்று என்று கருதினர். போரிலே தோற் றுப் பணிந்தவர்களைத் துன்புறுத்துவதும், ஓடிப்போனவர்களை விரட்டிப் பிடித்துக் கொண்டுவந்து துன்புறுத்துவதும் தமிழர் தகைமை அல்ல என்பதே பழந்தமிழர் கொள்கை. இவ் வுண்மையைச் சிலப்பதிகாரத்தாற் காணலாம்.

சேரன் செங்குட்டுவன் வடநாட்டிலே, தான் சிறைபிடித்த வேந்தர்களைத் தமிழகத்து மன்னர்களுக்குக் காட்டும்படி நீலன் என்னும் படைத்தலைவனை ஏவினான். அவன், செங்குட்டுவனால் தோற்கடிக்கப்பட்டுச் சிறை செய்யப்பட்ட கனக-விசயர்களைத் தமிழ் மன்னர்களிடம் அழைத்துச் சென்றான்.

முதலில் சோழநாடு புகுந்தான் நீலன். சோழன் சித்திர மண்டபத்திலே இருந்தபோது, நீலன் 'அமரகத்து உடைந்த ஆரிய மன்னரொடு' சென்றான். சோழனை வணங்கினான். அப் பொழுது சோழன் கூறியது குறிப்பிடத்தக்கது.

"பெரிய போர்க்களத்திலே மிகுந்த ஆண்மையுடன் போர் செய்து, தங்கள் வாள் குடை முதலியவைகளைப் போர்க்களத் திலே இழந்தவர்கள் கொலையாகிய போரை இனிச்செய்ய

மாட்டோம் என்பதற்கு அடையாளமான கோலம் பூண்டவர்கள், தங்கள் உயிரைக் காத்துக்கொள்வதற்காக ஓடினவர்கள், ஆகிய இத்தகையோரைப் போர்க்களத்திலே சிறை பிடித்தல் வெற்றி யாகாது" என்று தன் சேனைத் தலைவனைப்பார்த்து உரைத்தான்.

நீள்அமர் அழுவத்து, நெடும்போர் ஆண்மையொடு
வாளும், குடையும், மறக்களத்து ஒழித்து,
கொல்லாக் கோலத்து, உயிர்உய்ந் தோரை,
வெல்போர்க் கோடல் வெற்றம் அன்று; என
தலைத்தேர்த் தானைத் தலைவற்கு உரைத்தனன்"

(சிலப். நடுகல் 90–94.)

இந்நிகழ்ச்சி சிலப்பதிகாரத்திற் காணப்படுவது. போரிலே தோற்றவர்களைச் சிறைசெய்வது போர் வெற்றியன்று என்பதைக் குறித்தது இது. இந்த அறத்திற்கு மாறாக நடந்த செங்குட்டு வன் செயலைச் சோழன் வெறுத்தான். ஆதலால் அவன், சேரன் படைத்தலைவனாகிய நீலனிடம் முகங்கொடுத்துக்கூட உரையாட வில்லை. தன் படைத்தலைவன் முகத்தைப்பார்த்து மேலே கூறிய வாறு உரைத்தான்.

இந் நீலன், தோற்ற மன்னர்களைப் பாண்டியனிடம் காட் டச் சென்றபோது, பாண்டியன் புகன்றதும் குறிப்பிடத்தக்கது.

"போர்க்களத்தின் வெற்றி, பகை மன்னன் பக்கம் ஆகும் படி, போர்க்களத்தைத் துறந்து தவக்கோலம் பூண்டு ஓடியவர்க ளின்மேல் மிகுந்த சினங்கொண்டு, அவர்களைப்பிடித்துத் துன் புறுத்துகின்றவனுடைய போர்வெற்றி புதுமையான வெற்றி யாகவே இருக்கின்றது" என்றான் வெற்றிவேல் செழியன்.

அமர்க்களம் அரசனது ஆகத் துறந்து
தவப் பெருங்கோலம் கொண்டோர் தம்மேல்
கொதிஅழல் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது! என்றனன் போர்வேல் செழியன்".

(சிலப். நடுகல் 104–107.)

இவ்வாறு பாண்டியன் தமிழர்களின் போர் நீதியை எடுத்துரைத் தான். செங்குட்டுவன் செயலை எள்ளினான்.

## வெற்றி வீரர்களுக்குப் பாராட்டு.

பண்டைத் தமிரசர்கள், போரிலே மாண்டவர்களின் குடும் பங்களுக்கு உதவிசெய்து வந்தனர். மாண்டவர்களின் மைந்தர்

களைப் பாதுகாத்துவந்தனர், போரிலே வெற்றிபெற்ற வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். காயம்பட்ட வீரர்களையெல்லாம் காப்பாற்றினார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் புரிந்தார்கள். இவைகளையும் போர் நீதிகளாகக்கொண்டிருந்தனர்.

இந்த உண்மையைச் சிலப்பதிகாரத்தில் காணலாம்.

நீள்பில மன்னர் நெஞ்சுபுகல் அழித்து
வானவ மகளிரின் வதுவைசூட்டு அயர்ந்தோர்,
உலையா வெம்சமம் ஊர்ந்துஅமர் உழக்கி,
தலையும் தோளும் விலைபெறக் கிடந்தோர்,
நாள்விலைக் கிளையுள், நல்அமர் அழுவத்து
வாள்வினை முடித்து, மறத்தொடு முடிந்தோர் ;
குழிக்கண் பேய்மகள் குரவையின் தொடுத்து
வழிமருங்கு ஏத்த லாளொடு மடிந்தோர் ;
கிளைகள் தம்மொடு கிளர்பூண் ஆகத்து
வளையோர் மடிய மடிந்தோர், மைந்தர்:-
மலைத்துத் தலைவந்தோர் வாளொடு மடிய
தலைத்தார் வாகை தம்முடிக்கு அணிந்தோர் ;
திண்தேர்க் கொடிஞ்சியொடு தேரோர் வீழ,
புண்நோய் குருதியின் பொலிந்த மைந்தர் ;
மாற்றுஅரும் சிறப்பின் மணிமுடிக் கருந்தலை
கூற்றுக் கண்ணோடு அரிந்து களம்கொண்டோர் ;
நிறம்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாள் மறவர் ;
'வருக தாம்'என வாகைப் பொலம்தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்து
தோடுஆர் போந்தை தும்பையொடு முடித்து
பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தன்
ஆடுகொள் மார்போடு அரசுவிளங்கு இருக்கையின்.

என்பது சிலப்பதிகாரம்: நீர்ப்படைக் காதை. செங்குட்டுவன் போரிலே வெற்றிபெற்ற பின் என்ன செய்தான் என்பதை இவ்வடிகள் குறித்தன.

"போரிலே எதிர்த்த பகை மன்னர்களின் மன ஊக்கம் அழியும்படி போர்செய்து தமது வீரத்தை வெளியிட்டுச் சுவர்க்கம் புகுந்தவர்கள், அப்போரிலே பின்னிடாமல் நின்று போர் செய்து தலையும் தோளும் துணிபட்டுக்கிடந்தவர்கள், வாளால் வெற்றியுடன் போர்செய்து பகைவர்களை அழித்து மாண்டுபோன

வர்கள், உறவினர்களும், தமது மனைவிமார்களும், தம்முடன் இறந்துபோகும்படி போரிலே மாண்டவர்கள், ஆகிய இவர்களுடைய மைந்தர்களை யெல்லாம் வருக என்று அழைத்தான். எதிர்த்து வந்தோர் போரிலே மடியும்படி வாட்போர்செய்து வாகைமாலை சூடி நின்றவர்கள், பகைவர்களுடைய தேர்ப்படை வீரர்களைக்கொன்று இரத்தத்துடன் காட்சியளிக்கும் வீரர்கள், எதிரிகளின் கரிய தலைகளைக் கூற்றுவனும்கண்டு இரங்கும்படி அறுத்துத்தள்ளி வெற்றிபெற்ற வீரர்கள், தம் மார்பில் இருந்த கவசம் சிதைந்தும், மார்பிலே புண் பட்டும், அஞ்சாமல் எதிரிகளைப் புறமிட்டு ஓடும்படிசெய்துவந்த வீரர்கள், இவர்களையும் வருக என்று அழைத்தான்.

"இவர்களுக்கெல்லாம், அவர்கள் பெற்ற வெற்றிக்கு அடையாளமாகப் பொன்னாலாகிய வாகைப் பூக்களை அளித்தான். தான் பிறந்த நாளில் கொடுக்கும் கொடையைவிட மிகுதியாகப் பரிசளித்தான். நீண்டநேரம் தங்கியிருந்து பரிசளித்து அவர்களை யெல்லாம் பாராட்டினான்".

இச்செய்திகளே மேலே காட்டிய சிலப்பதிகார அடிகளில் கூறப்பட்டன.

போரினால் நாசமடைந்த நாடுகளை மீண்டும் வளப்படுத்துவது பண்டைக்கால மன்னர்களின் பண்பு. போரால் பொது மக்களின் உயிருக்கு உலை வைக்கமாட்டார்கள். அவர்கள் தப்பிப் பிழைக்கும்படி முன்னறிவிப்புக் கொடுத்துவிடுவார்கள். போரிலே தோற்றுப்போனவர்களைப் பிடித்துத் துன்புறுத்துவது போர் வெற்றி ஆகாது என்று எண்ணினார்கள். போரிலே மாண்டு போனவர்களின் மைந்தர்களுக்குப் போர் வீரர்களுக்குரிய பெருமையைக் கொடுத்தார்கள்; பரிசும் கொடுத்தார்கள். போரிலே வெற்றிபெற்ற வீரர்களுக்கெல்லாம் அவர்கள் மனம் மகிழும்படி பரிசளித்துப் பாராட்டினார்கள். இவ்வுண்மைகளை யெல்லாம் மேலே காட்டிய சான்றுகளாற் காணலாம்.

## போரிற் கவர்ந்த பொருள்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் பகைவர் நாட்டில் கவர்ந்த செல்வங்களைத் தம் நலத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளமாட்டார்கள். அவைகளை யெல்லாம், இரவலர்களுக்கும், கலைஞர்களுக்கும், வீரர்களுக்கும் வழங்கிவிடுவார்கள். இந்த உண்மையையும் இலக்கியங்களிலே காணலாம்.

"பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
அரிய என்னாது, ஓம்பாது வீசி"

என்பது பதிற்றுப்பத்து. கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் சிறப்பைக் கூறும் பகுதி இது. ஐந்தாம் பத்து.

"எவ்வளவு பெரிய செல்வமானாலும், போரிலே வெற்றி பெற்றுப் பகைவர்கள் நாட்டிலே கவர்ந்தவைகளை, 'இவைகள் கிடைத்தற்கரியவை, நாமே வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்று எண்ணமாட்டாய், இரவலர்களுக்கும் வீரர்களுக்கும் அள்ளிக் கொடுத்துவிடுவாய்' என்பதுதான் மேலே காட்டிய அடிகளின் பொருள்.

## அரசியல் எதிரிகளுக்கு மன்னிப்பு.

பண்டைத் தமிழரசர்களிடம் மற்றொரு பெரும் பண்பு இருந்தது. அவர்கள் தம் நாட்டிலே நல்ல செயல்களைச் செய்யும் போது சிறையில் வைத்திருப்பவர்களை யெல்லாம் விடுதலை செய்வார்கள். போரிலே பணியாதவர்களைச் சிறைபிடித்து வைத்திருப்பது அவர்கள் வழக்கம். அவர்களையும் நீண்டநாள் சிறையிலே வைத்துத் துன்புறுத்தமாட்டார்கள். சிறப்பாகத் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடத்தத் தொடங்கும்பொழுது, அரசியற் கைதிகளாக இருக்கின்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்து விடுவார்கள். இது மட்டும் அன்று. குடிகளால் கட்டமுடியாமல் மிஞ்சி நிற்கும் பழைய வரிகளையெல்லாம் தள்ளிக்கொடுப்பார்கள்.

"கொடித்தேர் வேந்தனொடு கடவி மன்னர்
அடித்தளை நீக்க அருள்சுரந்து ஒருபால்"

என்பது சிலப்பதிகாரம்—இந்திர விழவு ஊர் எடுத்த காதை. இந்திரவிழா தொடங்கும்போது சோழனுடைய பகைவேந்தர்களையும், அவர்கள் கால்விலங்கைக் கழற்றிச் சிறையிலிருந்து விடுதலைசெய்வார்கள்; இவ்வாறு அவர்களிடம் இரக்கங்காட்டுவார்கள்; என்ற கருத்தை மேலே காட்டிய அடிகள் கூறுகின்றன.

"சிறைப்படு கோட்டம் சீமின்! யாவதும்
கறைபடு மாக்கள் கறைவீடு செய்ம்மின்!

சிறைக்கோட்டத்தைத் திறந்து விடுங்கள்; வரிச்சுமையால் அவதியுறும் மக்களின் வரிகளைத் தள்ளிவிடுங்கள்" என்பது கட்டுரை காதையில் காணப்படும் செய்தி. காளி கோயிலுக்கு விழாச் செய்யத்தொடங்கிய பாண்டியன் இவ்வாறு அறிவித்ததாகக்கதை.

"சிறையோர் கோட்டம் சீமின்! யாவதும்
கறைகெழு நாடு கறைவீடு செய்ம்ம்.

சிறைப்பட்டிருப்பவர்களை, சிறைக்கோட்டக் கதவுகளைத் திறந்து விடுதலை செய்யுங்கள் நாட்டினருடைய வரிச்சுமைகளைத் தள்ளுபடி செய்யுங்கள்".

இவ்வாறு செங்குட்டுவன், கண்ணகிக்குக் கல் நாட்டும்போது கட்டளையிட்டான். இவன் கனக-விசயர்களையும், சிறைப்பட்டிருந்த ஏனைய வேந்தர்களையும் விடுதலை செய்தான் என்றே சிலப்பதிகாரம் சொல்லுகிறது.

சோழன், பாண்டியன், சேரன் ஆகிய மூவேந்தர்களும், நல்ல நாட்களிலே—சிறப்பாகத் திருவிழாத் தொடங்கும் நாட்களிலே—அரசியற் கைதிகளை எல்லாம் சிறையிலிருந்து விடுதலை செய்துவந்தனர் என்பதைக் காணலாம்.

இவ்வாறு எதிரிகளை மன்னித்து அவர்களை விடுதலை செய்வது ஒரு சிறந்த அரசியல் முறையாகும். எதிரிகளைத் தமது நட்பினர்களாகச் செய்துகொள்வதற்கு இம்முறை வழிகோலுவதாகும், பகைமை குறைவதற்கும் வழியாகும்.

போர் வெற்றிக்குப் பின்னர், பண்டைத் தமிழ் மன்னர்கள் தம் பகைவேந்தர்கள்பால் எப்படி நடந்துகொண்டனர் என்பதைக் குறிக்க இந்நிகழ்ச்சிகள் போதுமானவை.

அரசியல் எதிரிகளை அடக்கி ஒடுக்கி, நிலையான எதிரிகளாக வைத்திருப்பது சிறந்த அரசியல் அறிவாகாது. அவர்களை நண்பர்களாகச் செய்துகொண்டு நாட்டு மக்களின் வாழ்வையே சிறந்த குறிக்கோளாகக்கொண்டு ஆட்சி புரிவதுதான் உயர்ந்த அரசியலாகும்; மக்கள் ஆட்சிக்குரிய மாண்பாகும். இவ்வுண்மையைப் பண்டைத் தமிழர்கள் உணர்ந்திருந்தனர். அரசியற் பகைவர்களுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்த செயலே இதற்குச் சான்றாகும்.

## வாழ்த்து.

திருச்சிராப்பள்ளி வணிகர் சங்கச் செயலாளரும், பல கல்வி நிலையங்களின் செயற்குழு உறுப்பினரும், பொதுநலப் பணியாளரும், நமது சங்க உறுப்பினரும், சங்கக் கல்வி நிலயங்களின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்து வருபவருமான திருவாளர் தெ. துரைராசப் பிள்ளை அவர்கள் சென்னை சட்ட ஆய்வு மன்ற உறுப்பினராகத் (M. L. C.) தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்துப் பெருமகிழ்வெய்துகின்றோம். திரு. பிள்ளையவர்கள் மேலும் பல உயர் பதவிகளை அடைந்து தமிழுக்கும், தமிழகத்திற்கும், சிறந்த பல தொண்டாற்றி ஒளியுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

பொழிற்றொண்டர்.

# கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களின்
## விழா நிகழ்ச்சிகள்.

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 20 ஆம் ஆண்டுவிழா 22—2—58 மாலை உத்தமபாளையம் கருத்த இராவுத்தர் கலைக்கல்லூரி முதல்வர் பேராசிரியர் **கா. அப்துல் கபூர் எம். ஏ.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாதிரி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் **புலவர் மா. நன்னன்** அவர்கள் உள்ளம் என்ற தலைப்பில் ஓர் அரிய சொற்பொழிவாற்றினர்கள். தஞ்சை சரபோசி அரசர் கல்லூரி முதல்வர் திரு. **த. முருகையன் எம். ஏ.,** அவர்கள் தலைமையில் கல்லூரி மாணவர்கள் **கலிங்கத்துப் பரணி** என்னும் வரலாற்று நாடகத்தைச் சிறப்பாக நடத்தி மகிழ்வித்தனர்.

உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் 17 ஆம் ஆண்டுவிழா 28—2—58 மாலை திருச்சிராப்பள்ளி சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் திரு. **எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தஞ்சை சரபோசி அரசர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. **அ. இராமமூர்த்தி, பி. ஏ., பி. டி.,** அவர்கள் **முன்னேற்றம்** என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர்கள். பள்ளி மாணவிகளால் **நூர்ஜஹான்** என்னும் நாடகமும், இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளால் **கலை நிகழ்ச்சிகளும்** நடைபெற்றன.

## வாழ்த்து.

கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினரும், சங்க மதிப்பியற் கணக்காய்வாளரும், பொதுநலப் பணியாளருமான திரு. **அ. கைலேகுரு** அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா அவர்களது இல்லத்தில் 5—3—58ல் சிறப்பாக நிறைவேறியது. அதுபோது சங்கத்தார்

"தீந்தமிழ்ச் சங்கத் தொண்டிற் சேர்கைலே குருநாமங் கொள்
ஏந்தலே வாழி! உன்றன் இல்லறத் துணைவி நல்லா
ளாந்திரு வாழி! ஈண்டுன் அறுபதாண் டகவை கண்டு
நீந்தினம் மகிழ்ச்சி வெள்ளம் நிறைவுடன் வாழி நீவிர்".

"தமிழ்மொழி வளரத் தொண்டு தமிழகம் உவப்பச் செய்த
தமிழவேள் அன்பும் மற்றைச் சான்றவர் வாழ்த்தும் பெற்றீண்
டமிழ்தினும் ஆற்றல் சான்ற அறிஞர்வாய் மொழியும் கொண்டோய்
இமிழ்திரை உலகில் இன்பம் இயையபல் லாண்டு வாழி".

என வாழ்த்தினர். பின்னர் கரந்தைப் புலவர் கல்லூரி ஆசிரியர்களும், பிற பெருமக்களும் தங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டு இவ் விழா நினைவாகத் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் அறுபத்தொன்று அளித்து, தன்னாலான தொண்டுகளையும் செய்வேன் என்று கூறினர். இவர்கள் உடல் வலியோடு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேம்.

பொழிற்றெண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# நவமணித் தேர்ச்சியில் தமிழரது கலையுணர்ச்சி.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கு)

K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

இனி முத்து வகைகளின் குற்றம், நிறம், நற்றம் முதலிய வற்றின் விரிவைக் காண்குவம்.

கருகுதலையுடைய முத்தினை அணிவதால் அமைதி குலைந்து வாழ்க்கையி னூக்கங் கெடும். பெரிய உப்புக்கல் போன்று தோன்றும் முத்தினை அணிவதால் வெண்குட்ட நோய் உண்டாகும். மீனின் கண் போன்ற ஒளியுடைய முத்துக்களை அணிபவர் புத்திர சோகத்தால் சோர்வடைவர். ஒளியில்லாக் கிழ முத்து வறுமையினைக் கொடுக்கும். அணிபவரைப் பல பல நிலையில் கலங்க வைத்து நெஞ்சத்தைக் குமுறவைக்கும். பவளம் செவ்வரத்தம், முயற் குருதியாய செந்நிற வண்ணத்து முத்து உயிரை வருத்தி வாழ்வை அறுப்பதொரு வாளாகும். கோடுகளையுடைய முத்து கேட்டினைப் பயக்கும். வட்ட வடிவிலா முத்து வாட்டத்தையடையச் செய்து யாவராலும் கடியப்படும்வண்ணம் நிரயத்திலாழ்த்தும். வேப்பங்கொட்டை போன்ற உருவுடைய முத்து அறிவுக் கலக்கத்தை யளிக்கும். சதுர வடிவும் தட்டையாயுமுள்ள முத்து மிகுவளங்கொழிக்கும் பெருங்குடிமையியலைப் பாழ்படுத்தி ஊறு விளைவிக்கும். நெல்லிக்கனி போன்ற உருவுடன் பிளவுடைய முத்தினை அணிபவர் அல்லலுற்றவண்ணமாய்க் கதறிப் பதறிக் கருத்தழிந்து கெட்டலைவர். மற்றும் அன்னவர் இயற்றும் தொழிலில் இடரைப் பெருக்கும் தகைமைத்து. இவ்வாறுய குற்றமுடைய முத்துக்களை அணிந்து போலியாக மகிழ்ந்து கொள்ளலும், மருந்து முறைகளிலும் அமைத்து உபயோகித்துக்கொள்ளலும் தகாது.

பெரும்பாலும் முத்துக்கள் வெண்ணிறமுடையவாயினும் அவைகளிற் சில, நீலம், சிகப்பு, பச்சை, மஞ்சள் முதலாய பற்பல வண்ணங்களுடையதாய்க் காணலாகும். முத்துச் சிப்பியினின்றும் சங்கத்தினின்றும் விளையும் முத்துக்கள் சந்திரன் போன்று வெண்ணிறத் தோற்றமுடையவாய் மாடப்புறவின் முட்டையினளவு கனத்ததாயிருக்கும். மீனின் தலையிலுண்டாகும் முத்து பாதிரியின் மலர் போன்றிருக்கும். கரிய மேகத்தினின்றும் உண்டாகும் முத்து வெயிலவன் ஒளிபோன்றிருக்கும். வேய் முத்து, ஆலங்கட்டியின் நிறம் போன்றிருக்கும். இத்தகை

யது மேடு பள்ளமுடையதாயிருக்கும். ஏனத்துக் கோரைப் பல்லினின்று கிடைக்கும் முத்து செந்நிறமுடைத்து. பாம்பின் படத்திலுண்டாகும் முத்து நீல நிறத்துடன் கூடியிருக்கும். யானை மருப்பின் முத்தும், கரும்பின் கணுவிலுண்டாகும் முத்தும் மஞ்சள் நிறத்துடன் விளங்கும். வெண்மையாய சாலி எனும் நெற் கதிரிலிருந்து உண்டாகும் முத்தின் நிறம் பசுமை.

மஞ்சள் நிறமுடைய முத்தினை அணிபவர் பொருட் செல்வ முற்று ஈத்துவக்கும் இன்பத்தை நுகர்ந்து இசைபட வாழ்வர். பசுமை முத்தினை அணிவதால் தலைமைப் பாடும் இனிமைப் பாடு முரிய தெய்வப் பண்புகளோடு அருள்நிலைப்பேறும் வீறித் திகழும். வெண்ணிற முத்தினை அணிந்து கொள்பவர் ஞான வளனும் தேவத் தன்மையும் ஒருங்கு வாய்ந்து அறிவுச் செயல் வழி ஓங்கு நடையுடையராயத் திகழ்வார். நீல நிற முத்தினை அணிந்துகொண்டால் நீண்ட ஆயுளும் செல்வமுமுற்று வாழ்க் கையின்கண் எழுச்சிகொள்ளும் ஒளி விளக்கத்தோடு வேண்டிய வேண்டியாங்கு எய்தி வாழலாம். இத்தகைய முத்து கிடைப்பதற் கரிதென்றும், கிடைக்கப்பெறின், அதனை வெள்ளிப் பேழையில் வைத்த ஞான்றே, வானின்று மழை பொழியுமென்பர், மெய் யுணர்வு மிக்க சான்றோர்.

சிறந்த நன்முத்துகள் தற்போது கிடைப்பது அருமை. மலமாசிலாத சாதிக்காய் போன்ற அளவு பருமனுமுடைய அரும் பெரும் நித்திலத்தை முற்காலத்தே தந்த நீலத்திரைத் தென் கடல் இதுபோது முத்தங் கொடாதிருக்கின்றது. எனவே, முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட பெரிப்பிளசு (Periplus) என்ற யவன நூலில் குறிப்பிட்டுள்ள நித்திலம், மின்னல் போன்ற நல்லெழிலுடைய தமிழகத்து பத்திர முத்துபோன்ற பிற வகை கள், இஞ்ஞான்று ஒன்றுகூடக் காணப்பட்டில. இந்நூலின்கண், ஐயோனியரும் (தமிழ் மக்கள் இவர்களை 'யவனர்' என்று கூறி னர்) உரோமரும், நைல் நதி நாட்டாரும், பினீசியரும் வாணிபத் தின்பொருட்டு தமிழகத்துக்கு வந்து முத்து வகைகளின் வளத் தில் ஈடுபட்டு அளவிட்டுக் கூறவொண்ணா நன்முத்துகளின் செல்வச் சிறப்பினையே கொண்டேகினரென்றும், அத்தகைய முத்துகள், அணிபவரை நீடு வாழச் செய்வதினுன், அவை, அந்தந்த நாட்டு மன்னர்கள் முடிகளின்மீதும் மார்பின்மீதும் அழகும் புகழுங்கொண்டு பொலிந்து விளங்கினவென்றும் தெருட்டி நுவலப்பட்டிருக்கின்றது. மார்பினிலே அணிந்து கொள்ளுங்கால் குளிர்ச்சியைத் தரும் இத்தகைய உயர்ந்த முத்துகளல்லாத பிறமுத்துகள், முத்துச் சிப்பியினின்றும்

பெரும்பாலும் இஃதொன்று கிடைப்பதால், முத்துச் சிப்பி ஈனும் முத்துக்கு 'பிற முத்து' என்ற பெயரும் உளதாயிற்று.

சந்திரக் கதிர்போன்று வெள்ளொளி வீசும் நல்முத்துகளை அணிவதால், உடல் தட்பமுற்று உயிரும் தழைத்து வளரும் வாய்ப்பினை உணர்வாட்சியோடறிந்த பண்டைக்காலத் தமிழ் முன்னோர், சந்திரனது தெள்ளமுதக் கதிர் உடலில் பட்டதனா லுண்டாகும் விரும்பத்தக்க இனிமையியல்பு நல்ல முத்துக்கு முண்டு எனக்கொண்டு முத்துக்குரிய தெய்வம் சந்திரன் எனக் கருதிவந்த உண்மை, நினைவு கூர்ந்து அதன் மாட்சி தெளிதல் வேண்டும்.

இன்னவாறு, வியப்பும் மகிழ்வும் அடையும்வண்ணம் நவ மணிகளின் இயல்புகளை நுட்பமாக ஆய்ந்துணர்ந்த தமிழர், தம் சமுதாய வாழ்வில், நவமணிகளின் சீரும் சிறப்பும் உயர் நிலையாக ஓங்க, மெஞ்ஞானிகள் காணும் இன்ப அறிவு அனுபவங்களை அவைபாலேற்றி அவைகளை நவசக்திகளெனப் போற்றிச் சாற்று வர். தனிச்சுடர் விரிக்கும் இம்மணிகளை, அகநிலை மெய்யுணர் வின் இயலழகால் நோக்குறுதவழி அம்மணிகளின் புறநிலை யிருப்பு செல்வப் பொருளழகிலதாகி இழுக்குறும். மெய்ச்சுடர் வீசும் இம்மணிகளைத் தெளிந்து அகத்தே நுகர்தலில்லையேல் பிறவிப் பயனுமில்லை; வாழ்க்கையின் நலனுமில்லை. இக்கருத்துக் கொண்டே நவமணிகளை நவ சக்திகளெனக் கொண்டு அச்சக்தி களுக்குத் தெய்வ மணம் நாறுமாறு ஏற்றங்கூற நற்றமிழர் முற் பட்டனர். உமையம்மையின் சிலம்பினுள் தோன்றியுள்ள மணி கள் நவ சக்திகள் என்றும் பாராட்டுவர் தமிழ் முனிவர். அவர்க ளாவார்: (1) மாணிக்கவல்லி (2) மௌத்திகவல்லி (3) புட்பராகவல்லி (4) கோமேதகவல்லி (5) வைடூரியவல்லி (6) வைரவல்லி (7) மரகதவல்லி (8) பவளவல்லி (9) இந் திர நீலவல்லி யென்பார். சோதிட நூல் வல்லாரும், பிற்றை ஞான்று, நவமணிக்குரிய தெய்வம், புதன், சுக்கிரன், சந்திரன், குரு, சூரியன், செவ்வாய், கேது, சனி, இராகு என்பர். நவமணி வியப்பிலே ஆழ்ந்து ஒப்புயர்வற்ற பராசக்தி, சிறுமியாய்ப் பொன் னூஞ்சல் ஆடுவதை உயர் நிலையில் வைத்துப் பின் மனக்கண்ணில் வரும் அம்மையாக, பாவனை முதிர்ச்சியிற் கொண்டு,

நிகரில்செம் பவளக் கொழுங்கால்
நிறுத்திமிக நீடும்அம் பரவிலாசம்
நேர்கிலம் எனத்தளரும் வண்ணம்
கறுத்தமணி நீலவிட் டம்சமைத்துப்

பகர்இள நிலாத் தரள வடம் இட்
டசைந்திங்கு பதுமரா கப்பலகைமேல்
பன்னுகலை வயிரமொடு செல்வவயி டூரியம்
பாங்கரில் பரவி ஒளிரச்
சிகரிமிசை தவழுமுகில் உறழ் புட்ப ராகம்
சிறந்துள வி தான நிழலில்
தேசுமலி முகம்ஐந்து குலவுகோ மேதகச்
செங்கேழ் மணிக்கொர் துணையாய்ப்
புகர்இல்மணி மரகதம் இருந்தாடல் என்னநீ
பொன்ஊசல் ஆடி அருளே'

என இவ்வண்ணம் தம்மையே மறந்து அண்டமதையும் அதன் அளவிலாத உயிர்களையும் காக்கின்ற அம்மையின் பேராற்றலைப் போற்றி மகிழ்ந்தனர், தமிழ்ப் புலவர் பெருமக்கள் பலர்.

தமிழ்ச் சான்றோர், மண்ணகத்தே மனம் மலரும் நல்லுறவுகளாகிய பல புறவியற்கைப் பொருள்கள் உலகினை உய்விக்க வந்தவையென உளங்கொண்டு அவை வழி இறைவனது அருள்வெள்ளச் சீரினைக் கண்டனர். இவ்வாறு அழகிய அருளொளியின் நிறைவே முழுமுதற் பெருங்கடவுளாய சிவமெனத் தேர்ந்துணர்ந்த தமிழர், நவமணிகள் வாயிலாக இறைக்கும் தமக்கும் ஓர் தொடர்பும் கொண்டு அவைபால் கனிவாய சிந்தை படர்ந்துசெல்லும் இயல்பு இறும்பூது பயக்கும் பான்மையது. அன்னவர் கனிவாய சிந்தையொடு குலத்த முத்து ஈறுய நவமணிகளை மெய்ப்பட அணிந்து, மனவாக்குக்கு அப்பாலுள்ள மெய்ப்பொருளொடு ஒப்ப நோக்கிப் புனித இயல்பாய் வாழ்வில் நிலைநிற்பர். இத்தகைய மணிகளை அணிந்து மகிழும் மெய்யின்பத் திருவினர் மெய் வாழ்க்கைத் திருவாளராய் வயங்குவர். நவமணிகள்பால் காட்டும் கனிவாய அகநிலை மெய்யுணர்வு, நாளடைவில் இறைநிலை குறிக்கும் உண்மை அழகின்ப அறிவு விளக்கமாய்த் தானே மலரும். மலரவே, நவமணிகள்பாலுள்ள புறநிலைபற்றிய செல்வச் செருக்கு மறைய, அம் மணிகளது ஒளியழகின் முதிர்வே, அன்பார்ந்த இறைவன் என்ற கருத்துப் பழகும் வாய்ப்பு படர்வது இயற்கை. அழகின் நிறைவாய இறை, மக்களை அழியவிடாது அருள் புரிய, எங்கும் நீக்கமற நிறைந்து தோன்றுதல் வேண்டுமென்றதாகிய சீரிய கருத்து, பாவலர்பால் முகிழ்ப்ப, பாவலரின் அழகன்பில் இறைவர், குடிபுகுந்து அவர்தம் பாட்டோவியக் கிழியில் வனைந்தனைய திருமேனிகொண்டு, பாட்டின் தமிழோசையாய் வளர்ந்து அவர்முன் இளநலங்காட்டி தளர்நடையிட்டு முத்தம்தர வருவார்: சப்பாணி கொட்டுவார், சிறுபறை முழக்குவார் : நம் வாழ்க்கைச் சிறு

தேரையும் உருட்டியருள்வார். இத்தகைய கவிதைப் பாங்கின் மரபு வழி, சுருக்கமும் தெளிவும் கொண்ட சொல் நோக்கமும், இனிமையும் பாவிகமும் கொண்ட பொருள் நோக்கமும் பெறக் கவிபாடும் அருட்புலமையுடைய பகழிக்கூத்தர், சிவத்தின் இளைய திருக்கோலமாகிய முருகனை நினைந்துருகித் தமிழ்நாட்டு முத்தின் வகை பலவற்றில் காணக்கிடைக்கும் குற்றங் குறைகளைக் காட்டி முருகரது முத்தத்தின் பெருமையினை நம் செவிமடுப்ப

கத்துந் தரங்க மெடுத்தெறியக்
கடுஞ்சூ லுளைந்து வலம்புரிகள்
கரையிற் றவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்ட றருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா! முத்தந் தருகவே,
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முருகா முத்தந் தருகவே!

என எடுத்துக் கிளக்குங்காலை, நம் செவிக்கண் தெய்வ மண முருகு ஊறும் இன்பத்தேன் பாய்ந்து அமையுஞ் செம்மை நினை தொறும், முடிநிலைப்பேற்றின்கண் விழுமியது எய்துவதற்கு நெறிகோலும். முத்து ஈறாய நவமணிகள் மூலம் பெறக்கிடக்கும் இத்தகைய விழுநிதி வேறில்லையெனத் தமிழுலகின்கண், இறையே, அதனைக் காப்பது தம் கடமையென, வணிகருருவாய்* நின்று, நவமணிகளின் நுட்ப இயல்புகள் யாவையும் திட்பமாய், வழக்கினிலும் காலப்போக்கிலும் மறைபடாவண்ணம், விளக்கிய பண்பு சங்க காலத்து அகப்புறக் காட்சிமுறைக் கல்வியின் மாட்சியினைப் புலப்படுத்தா நிற்கும்.

[புதன்–பச்சை; சுக்கிரன்–வைரம்; சந்திரன்–முத்து; குரு–புட்பராகம்; சூரியன்–சிகப்பு (மாணிக்கம்); செவ்வாய்–பவளம்; கேது–வைடூரியம்; சனி–நீலம்; இராகு–கோமேதகம்.]

முற்றும்.

* மாணிக்கம் விற்ற படலம்—திருவிளையாடற் புராணம்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

## சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு.]

எள்ளது பொடி, எள்ளாதற் றன்மையொடு புணராது நிற்பது போல், எழுத்தாலாகிய மொழி எழுத்தாதற்றன்மையொடு புணராது நிற்பதில்லை. புணர்ந்தே நிற்குமென்பதாம். இக்கருத்துப் புலப்படவே, ஆசிரியர் தொல்காப்பியர், நன்னூலார் "எழுத்தே த்னித்துத் தொடர்த்தும்" என்பது போலவே, "ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழியுளப்பட, மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே" என 'எழுத்து' மொழியென்றனர் என்க.

இனி, "ஓரெழுத் தொருமொழி.....................நெறியே" (தொல்—எழுத்—மொழி) "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே" (தொல்—சொல்—பெயரியல்) என முன்னும் பின்னும் நிகழும் பாக்களின் கருத்துக்களைத் தழுவி, இளம்பூரணர் 'சொல்' என்பதற்கு விளக்கங் கூறுமிடத்து "சொல்லாவது எழுத்தொடு புணர்ந்து பொருளறிவுறுக்கு மோசை" என எழுதினர். அவ்வுரையைத் தழுவியே சேனாவரையரும் "சொல்லாவது........ பொருள் குறித்து வருவது" என எழுதினர்.

இனிப் பொருட்டன்மைகளையே யுணர்த்தும் அத்தன்மைகளோடு கூடிய பொருள்கள் அருத்தாபத்தியாற் பெறப்படும். சொற்களுக்குப் பொருட்டன்மைகளை யுணர்த்துதலிற்றான் ஆற்றலுண்டு, பொருள் களை யுணர்த்துதலி லாற்றலில்லை என ஒரு சாராரும், ஆவைக் கொண்டு வா என்றல் முதலிய வழக்கின்கண் ஆவைக் கொண்டு வருதன் முதலிய நிகழ்ச்சிகள் காணப்படுதலின் சொற்கள் பொருட் டன்மைகளோடு கூடிய பொருள்களையுணர்த்துகின்றன எனப் புலப் படுகின்றன, அங்ஙனம் புலப்படுதலால் சொற்களுக்குப் பொருட் டன்மைகளோடு கூடிய பொருள்களை யுணர்த்துதலிலாற்றலுண்டு என ஒரு சாராரும் கூறுப. இவ்விருதிறக் கொள்கைகளுள் ஆசிரியர் தொல்காப்பியர், "பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும், சொல்லினாகும்" (தொல்—சொல்) "ஆயிருதிணையி னிசைக்குமன சொல்லே" (தொல் — சொல் — கிளவி) "பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவியும்" (தொல்-சொல்-கிளவி.) "ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவி யாண்மையறி சொற்காகிட னின்றே" (தொல் — சொல் — கிளவி) "பெண்மை சுட்டிய" 'ஆண்மை சுட்டிய' 'பன்மை சுட்டிய' 'ஒருமை சுட்டிய' (தொல்—சொல்—பெயர்) எனச் சொற்கள் பொருட்டன்மைகளை யுணர்த்துதலி லாற்றலுடையன என்பதுபடக் கூறினர். அவ்வாறு

கூறியதோடமையாது, "ஆயிருதிணையி னிசைக்குமன சொல்லே" என்னு நூற்பாவின்கண் மக்களாகிய வுயர்திணைப் பொருளையும் மக்களல்லாதனவும் பிறவுமாகிய உயிருடையன உயிரில்லன எனப் படும் அஃறிணைப் பொருளையும் அவ்வத் தன்மைகளுடன் (பொதுத் தன்மைகளுடன்) அவ்வச் சொற்கள் உணர்த்தும் என்பதுபட'

"உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே
அஃறிணை யென்மனா ரவரல பிறவே"

என விளக்கிக் கூறியிருத்தலினாலும் "ஆடூஉவறி சொல்" "மகடூஉவறி சொல்" "ஒன்றறி சொல்" "பலவறி சொல்" "பல்லோரறியுஞ் சொல்" "யாதெவனென்னு மாயிருகிளவியு மறியாப் பொருள் வயிற் செறியத்தோன்றும்" "எப்பொருளாயினு மல்லதில்லெனின் அப்பொருளல்லாப் பிறிது பொருள் கூறல்" "அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்" "பொருளொடு புணராச் சுட்டுப்பெயராயினும்" (தொல்–சொல்–கிளவி) "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" (தொல்—சொல்—பெயர்) எனச்சொற்கள் பொருளை யுணர்த்துதலி லாற்றலுடையன என்பதுபடக் கூறியிருத் தலினாலும் சொற்கள் பொருட்டன்மையோடு கூடிய பொருள்களை யுணர்த்துமாற்றலுடையன என்னுங் கொள்கையைப் பின்பற்றியவ ரென்பது புலப்படுகின்றது. ஆதலால் உரையாசிரியரும், சேனா வரையரும், "சொல்லாவது .................... மோசை" "சொல் லாவது ................. வருவது" என எழுதுவராயினர் என்க.

நச்சினார்க்கினியர் ஆசிரியர் கருத்துக்கு மாறுகச் சொற்கள் பொருட்டன்மைகளை யுணர்த்துமாற்றலுடையன என எழுதலாயினர்.

இனிச் சேனாவரையர், "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே" என ஆசிரியர் கருவியைக் கருத்தாவாக ஆக்கிக்கூறுதல் போல, சொல்லாவது பொருள் குறித்து வருவது எனக் கருவியைக் கருத்தாவாக்கிக் கூறினர்.

நச்சினார்க்கினியர், பின்னர் "உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே" என வரும் முதற்பாவினுரையில் 'இசைக்கும்' என்பது எவ்வாறு 'உணர்த்தும்' என்னும் பொருளைத் தரும் என ஆய்ந்துரைக்கும் பகுதியில் "பொருளையுணர்த்துவான் ஒரு சாத்த னேயெனினும் அவற்கு அது (சொல்) கருவியாகவல்லது உணர்த்த லாகாமையின் அக்கருவி மேற்றொழிலையேற்றிச் 'சொல்லுணர்த்தும்' என்று கருவி கருத்தாவாகக் கூறினர். இவ்வாசிரிய ரெவ்விடத்துஞ் சொல்லைக் கருவி கருத்தாவாகக் கூறுமாறு மேலே காண்க. அது, "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றாற்போல்வன" என எழுதுவோமென்றுன்னது, இங்கு, "இனிச் சேனாவரையர் சொல், பொருள் குறித்துவருமென்றாராலெனின் ஒருவன் பொருட்டன்மையை யுணர்தற்குச் சொல் கருவியாய் நிற்ற

லன்றித் தனக்கோருணர்வின்மையிற்ருெரு பொருளேக் கருதி நிற்றலின்றென மறுக்க" என முன்னெடுபின் முரணுற எழுதுகின்றனர். சேனவரையருரை யெழுதுங்கால் ஆசிரியரை யடியொற்றி யவர்கருத்துணர்ந்தே பெரும்பாலுமெழுதுவர் என்பது நுணுகுவார்க்குப் புலனகுமென்க.

இனி, "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னு நூற்பாவுரையில் நச்சினர்க்கினியர் "குறித்தன" என்பதற்கு, 'உணர்த்துதலேக் கருதி' என எழுதியிருத்தலேயுங் காண்க.

வருவது = நிகழ்வது. எழுத்தாதல் = எழுத்தாகத்தோன்றுதல், எழுத்தாதற்றன்மை = எழுத்தாகத்தோன்றுந்தன்மை. (எழுத்தாகத் தோன்றுதற்குரிய தன்மை.)

தொடர்மொழிக்கண்ணு மெழுத்தொலீ மாருது நிற்றலின் ஓரெழுத்து மொழிக்கண்ணே யன்றி ஈரெழுத்து முதலிய தொடர்மொழிக்கண்ணு மெழுத்தாகத் தோன்றுந்தன்மையிருத்தல் காண்க.

சொல் எழுத்தொலி மாருது பொருள் குறித்து வருதலால் உரையாசிரியர், சொல்லாவது, "எழுத்தொடுபுணர்ந்து" எனக் கூறினர். சேனவரையர் அவ்வுரையைப் பின்பற்றி "சொல்லாவது, "எழுத்தோடு ஒருபுடையா னெற்றுமையுடைத்தாய்" என எழுதினர்.

கட்டுரைச்சுவை = தொடுத்துச் சொல்லுதற் கண்டோன்றும் தொடர்மொழிச்சுவை. சுவை = இன்பம். அது செவியானுகரப் படுவது. "செவியிற் சுவை" எனத் திருவள்ளுவர் கூறுதலுங் காண்க. இச்சுவை செய்யுட்கண்ணே பெரும்பாலும் வருதலின் பலவிடங்களிற் கட்டுரைச் சுவையெனப் பொதுவாக எழுதியவர் "ஆக்கந்தானே" (தொல் — சொல் — கிளவி) என்னு நூற்பாவி னுரையில் "தானே" என்பது செய்யுளின்பந் தோன்ற நின்றது என எழுதினர். இன்னுமிரண்டொரு நூற்பாக்களி னுரையிலு மவ்வாறெழுதினர். அவ்வாறு கூறினமையால் அசை நிலேகள்

---

ஓரெழுத்தொருமொழி (தொல்–எழுத்-மொழி மரபு) என்னு நூற்பாவில், தொடர்மொழியென வாளா கூருது இரண்டிறந்திசைக்குந் "தொடர்மொழி" என்றதனல் இரண்டுந் தொடர்ந்தன என நன்னூல் விருத்தியுரையாசிரியர் கருத்துப்படியே சேனவரையரும் கொண்டனரென்பது தனிமொழியொழிந்தனவற்றைத் "தொடர் மொழி" எனக் குறிப்பிடலாற் பெறப்படுகிறது என்க.

வழக்கின்கண் தொடர்மொழிச் சுவை பயக்க வாரா என்பது **சேனுவரையர்** கருத்தன்றென்க. **சி. கணேச ஐயரவர்கள்** தங்குறிப்புரையில், கட்டுரைச்சுவை = வாக்கியச்சுவை என எழுதியிருத்தலையும் நோக்குக. செயப்படுபொருளையுணர்த்துஞ் சொல்லொடு கூடியும் கூடாதும் எழுவாய் பயனிலைகளை யுணர்த்துஞ் சொற்கள் அடையடுக்கப்பெற்றும் அடுக்கப்பெருதும் தொடர்ந்து நிற்கும் தொடர்மொழியே கட்டுரை, வாக்கியமெனப்படுமென்க. வாக்கியம் என்பது வடமொழியாகும். இங்குக் 'கட்டுரை' என்பதற்குச் செய்யுளென மட்டுங் கொள்ளுதற் கிடனில்லையென்க.

வழக்கின்கண்ணும் அவன்ருன்வந்தான் நீதான் சொல்லிப்பார் என இவ்வாறுதான் முதலியன கட்டுரைச் சுவைபட வருதல் காண்க.

"சொற்ருன் இரண்டு வகைப்படும் ............... என" என்பது எழுத்துத் தனித்து நின்றும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து மொழியாதல்போல, மொழியும் தனித்து நின்றும் இரண்டு முதலியனவாகத் தொடர்ந்து நின்றும் பொருளுணர்த்துமோ அன்ருமோ எனவரும் ஐயமகற்றுகின்றது; முன்னிலைக்கு (காரணத்திற்கு) உள்ளதன்மை, செய்திக்கும் (காரியத்திற்கும்) அமைதலின் என்க. சில காரணங்களின்றன்மை அக்காரணங்களாலாய காரியங்களில்லாதிருத்தலு முண்டாதலின் ஐயமேற்படல் பொருந்தும்.

**சமயம்** = இச்சொல் இப்பொருளையுணர்த்துக என்னுமிறைவன் சங்கேதம்(குறிப்பு) அன்றி யெப்பொருளைக் குறிக்க (உணர்த்த) எச்சொல் எழுந்ததோ அச்சொல் அப்பொருளையே உணர்த்த அச்சொல்லிலுள்ள ஆற்றல் என்பது சமயம் என்பதற்குப் பொருளாகுமெனினுமாம். சமயம், சங்கேதம், சக்தி, ஆற்றல் என்பன ஒரு பொருட்கிளவிகள், "ஆற்றல்" என்பது நீங்க எஞ்சியன யாவும் வடசொற்களாகும். சொல்லின்கணிலை பெறுமாற்றலையே யவ்வாறு வழங்குவர்.

**அவாய் நிலை** = நிலைமொழியும் வருமொழியும் தாங்கருதிய பொருளையுணர்த்த, முடிப்பதும் முடிக்கப்படுவதும் அடையாக நிற்பதும் அடைகொளியாக வருவதுமாக ஒன்றனையொன்று விரும்பி நிற்றல், சாத்தன் வந்தான், செந்தாமரை, என்பன முதலியன தாங்கருதிய பொருளை விளக்குவதற்கு ஒன்றனை விரும்பி நிற்றல் காண்க. நீவந்தான் என்ருலவாவாது நிற்றல் காண்க.

**தகுதி** = நிலைமொழியும் வருமொழியும் தாங்கருதிய பொருளை விளக்குதற்கேற்ற தன்மை. "சாத்தன் வந்தான்" என்ருல் '**சாத்தன்**' என்னுஞ்சொல் வருவதற்கு வினைமுதலாதலை யுணர்த்தற்கும் '**வந்தான்**' என்னுஞ்சொல் அவ்வினை முதலின வருதற் ருெழிலிறந்த காலத்திலுண்டென்பதை யுணர்த்தற்கு முரியதன்மைகளை யுடையனவாக நிகழ்தல் காண்க.

'தீயானனைத்தான்' என்புழித்தீயால் என்பது கருவியையும் நனைத்தா னென்பது காரியத்தையும் (செய்தியையும்) உணர்த்துதலால் ஒன்றனையொன்று அவாவி நிற்பினும் (அவாய்நிலை அவற்றின் கணிருப்பினும்) நனைத்தற்கேற்ற தகுதி தீக்கின்மையால் "தீயால்" என்பதனைக் கருவியாக்குவதற்குத் தகுதி யின்ருக நிற்றலின் அவை தாங்கருதிய பொருளை யுணர்த்தலாற்ரு வாயின. தீயால் என்பதற்குத் தகுதியின்ருகவே நனைத்தான் என்பதற்கும் தீயானனைத்தற்ரெழில் இறந்த காலத்திற் சாத்தனுக் குண்டென வுணர்த்தும் தகுதி யின்ருயது என்க.

அண்மை நிலை = நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியும் சேர நிற்றல், 'சாத்தன் வந்தான்' என்புழிநிறுத்த சொல்லாகிய சாத்தன் என்பதும் குறித்து வருகிளவியாகிய வந்தான் என்பதும் அடுத்து நிற்றலையுடைமையான் பொருளை யினிது விளக்குகின்றன. சாத்தன் கொற்றன் மலையிற் போனுன் வந்தான் எனக் கூறின் சாத்தனென்பது வந்தான் என்பதும் ஒன்றனையொன்று அவாவி நிற்பினும் சாத்தன் என்பவனை வருதலின் வினைமுதலாக்கற்கும் வருதற் ரெழிலவனுக்கு இறந்த காலத்திலுண்டு என்பதற்கும் தகுதியுடையனவாயினும் 'சாத்தன் வந்தான்' என அடுத்து நில்லாமையாலப் பொருள்களை இனிது விளக்க இயலாது நின்றன.

ஆதலால் அவாய்நிலை முதலிய மூன்றும் ஒரு தொடர்மொழிக் கண்ணேயிருத்தல் வேண்டும். இன்றேற் பொருளை விளக்காதொழியுமென்க.

அவாய்நிலை முதலிய முத்தன்மைகளமைய இயைந்து பொருளை விளக்குந் தனிமொழிகளினீட்டம் தொடர்மொழியாகுமென்பது வடநூலார் கொள்கை.

திணை பால் இடம் காலம் மரபு முதலியவற்ருல் வழுப்படாமல் இயைந்து பொருளை விளக்குந் தனிமொழிகளினீட்டம் தொடர்மொழியாகுமென்பது தமிழ் நூலார் கொள்கையாகுமென்க.

இது, " வினையிற்ரேன்றும் பாலறிகிளவியும்
பெயரிற் ரேன்றும் பாலறிகிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே "

(தொல்–சொல்–கிளவி)

என்பது முதலியவற்ருற் பெறப்படும் என்க.

இவ்விரு வகையும் உற்று நோக்குவார்க்குப் பொருளாலொன்றுபடுமென்க.

(தொடரும்)

## ஓர் மதிப்புரை.

# *கங்காதேவி எழுதிய மதுரா விஜயம்.

[நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.]

இந்த, கண்ணனூர் கொப்பம் போரில், வீரவல்லாளன், மதுரை சுலுத்தான் அண்ணன் மகன், நசிர்உடீன் என்பவனுல் சிறைசெய்யப்பெற்றுக்கொல்லப்பெற்ருன் என்பது மகமதிய வரலாற்ருசிரியர்களால் சொல்லப்பெற்று ஏனையோராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றுவரும் செய்தியாகும்; இதற்குச் சான்ருக, இந்நிகழ்ச்சிக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் எடுக்கப்பெற்ற மைசூர் நாட்டிலுள்ள ஒரு வீரக்கல்லிற் பொறித்துள்ள எழுத்துக்களையும் காட்டுவார்கள்; எனினும், இச்செய்தி மறுமுறையும் எல்லாச்சான்று களையும் ஆராய்ந்தே முடிவு செய்யவேண்டிய ஒன்ருகும். போசலர் பேரரசு முறியடிக்கப்பெற்றுக் குலைந்ததாயினும், மதுரைச் சுலுத்தானியம், பிற்காலங்களில், அப்பேரரசின் வழியினராலும், துணைவர்களாலும், ஏனைத்தமிழ்க்குடிகளாலும் இடர்படுத்தப் பெருமலில்லை.

கியாஸ் உடீன், கொப்பத்திலிருந்து, மதுரைக்குத் திரும்பி, நெடுநாட்கள் உயிர்வாழவில்லை; மதுரையில் பரவிய ஒரு தொத்து நோயாலும், பேதியாலும், பலர் மடிந்தனர். 'நேற்றுளார் இன்று மாள நின்றனர்' என்னும் சிறந்த உண்மையைப் பலரும் மயக்கமில் லாமற் கண்டனர். கியாஸ் உடீனும், அவன் தாய், மனைவி, மகன் முதலியோரும் பதினைந்து நாட்களில் இறந்தனர். சுலுத்தான் மகன், முன்னரும், சுலுத்தான் ஒரு வாரத்துக்குப் பின்பும் இறந்தமையால், மதுரைக்கு மன்னனுக யாவன் வருவது என்ற கேள்வி பிறக்குமுன், நாஸிர்உடீன் என்பவன் பொன்னையும் வெள்ளியையும் வாரிவீசிப் புலவர்களையும், ஆட்சித் துணைவர்களையும் கைவசப் படுத்திக்கொண்டு மதுரைக்குச் சுலுத்தான் ஆயினன்.

இந்த, நாஸிர்உடீன், தில்லியில் வீடுகளில் வேலை செய்து கொண்டிருந்தவன். தன் சிற்றப்பன், மதுரைச் சுலுத்தானுயினுன் என்பது தெரிந்தவுடன், தில்லியைவிட்டு, பிச்சைக்காரன்போலக் கோலம் மாறி, மதுரைக்கு வந்து, சிற்றப்பனை அண்டி அவன் ஆதரவுக்கு உள்ளாகி, அரசாங்கத்திலும், படையிலும் தக்க உரிமைப் பதவிகளைப் பெற்ருன். மகனும் மன்னனும் மடியவே, எளிதில் மதுரைக்கு அரசனுகிவிட்டான். 'அறத்தொடு பிச்சை கூவி அழைப்போர் அரசரோடு இருந்து அரசாளினும் ஆளுவர்' என்னும் பொன்மொழிகள் எழுந்ததெல்லாம் இத்தகைய நிகழ்ச்சிகளின் நினைவினுலும் இருக்கக் கூடுமோ ?

---

* மதுராவிஜயம் — வடமொழிநூல் — கங்காதேவி இயற்றியது. ஆங்கில மொழி பெயர்ப்பு. பதிப்பாசிரியர் திரு. S. திருவேங்கடாச்சாரியார் — அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் வெளியீடு.

இவன் சுலுத்தானனவுடன், இவன் பெயர், எல்லாப் பள்ளி வாசல்களிலும் வாழ்த்தப்பெற்றது. இறந்த மன்னவனுக்கான இறுதிக்கடன்களை மிகச்சிறப்பாகச் செய்தான்; நாற்பது நாட்கள் புலவர்களால் குர்ரான் ஓதப்பெற்றது; பெருவிருந்துகளும் ஓயாது நடந்தன. இஸ்லாமியர்கள் உள்ளத்தில் உவகையும் எழுந்தது. ஆனல், இவன், தான் செய்யவேண்டிய முதற்கடமையாக, முன் சுலுத்தானின் மகளை மணந்தவனைக் கொன்று, அவன் மனைவியாகிய சுலுத்தான் மகளைத் தான் மணந்து கொண்டான். அதனோடு நில்லாமல், அவனோடு தொடர்புற்றிருந்தவர்களையும், பரிவுகாட்டிய வர்களையும் கொன்று ஒழித்தான். இவன் ஆட்சியில் பல இன்னல்கள் நேர்ந்திருக்கக்கூடும் என்றும், மதுரைச் சுலுத்தான் பதவியின் நிலைமையும் தளர்வடைந்திருக்கக்கூடும் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இவன் ஆட்சி கி. பி. 1352ல் முடிவடைந்திருக் கலாம் என்று கருதப்பெறுகிறது. இவனுக்குப் பின்னர் சுலுத்தான் பதவியை ஏற்று நடத்தும் ஆற்றலுடையார், மதுரையில் ஒருவரும் இல்லாதபடியால், மதுரை மகமதியக் கூட்டம், தங்களுக்கு ஒரு சுலுத்தானைத் தேடி, அப்போது ஆற்றலுடன் தோன்றிவரும் பாமணி மன்னனைச் சேர்ந்தது; அம்மன்னனும் தன் பெயருடைய வனும், தனக்கு மருமகனுமாகிய குரபத்ஹாஸன் காங்கு என்பவனைத் தேர்ந்து அனுப்பினன். இந்த ஹாஸன், மதுரைச் சுலுத்தானிய அரசுகட்டிலில் கி. பி. 1353லிருந்து 1371வரையில், ஆசனகவே அமைந்து, ஆட்சியை இழிவுபடுத்தி, மதுரைச் சுலுத்தானியத் திற்கும் அழிவுகொணர்ந்து அழிந்தான். இவன் நடத்தை, இழிந்த வற்றுள்ளும் இழிந்ததாகும்; அரச அவையில், தான், பெண்போல் அணிகலன் அணிந்துகொள்வதும், சொல்லுதற்கும், ஏன்? எண்ணு வதற்கும் கூடாத இழிந்த செயல்களைப் பல்லோர் காணச்செய்வது மாகக் காலம் கழித்தான். இத்தகைய இழிந்தோரும் ஆட்சித் தலைவர்களாகத் தோன்றும் காலமும் இருந்திருக்கிறது என்பது, மக்கள் இனத்திற்கே ஒரு மாசாகும். இவனுடைய நாளில்தான், கம்பண்ணன், மதுரையைக் கைப்பற்றியது போரில், இவன் கம்பண்ணனல் வாளால் வெட்டி வீழ்த்தப்பெற்றான் என்று இந்நூல் கூறுகிறது. இந்த இழிந்தவனைக் கொன்றவன், மங்கு என்னும் கம்பண்ணனின் படைத்தலைவர்களில் ஒருவன் என்றும், ஒரு நூல் கூறுகிறது. இந்தச் சுலுத்தான் சிறை செய்யப்பெற்றான் என்றும், சில வரலாறுகள் கூறுகின்றன. எது எவ்வாருயினும், தென்னாட்டில் தோன்றிய மதுரைச் சுலுத்தானியம் என்னும் மகமதிய ஆட்சி இந்த இழிந்த சுலுத்தானுடன் மறைந்தது.

கம்பண்ணன், மதுரையைக் கொண்ட காலம், கி. பி. 1371 என்பது பொதுவான கொள்கையாகும். ஒரு வரலாற்றுப் பேரா சிரியர், சில ஆதரவுகளைக் கொண்டு கி. பி. 1343க்கும் 1356க்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம் என அநுமானித்தார். இந்தக் காலம் மறுமுறையும் நன்கு ஆராய்ந்து முடிவு காணவேண்டிய

தேயாகும். மகமதிய ஆட்சி நாட்களில் ஹிஜிரா ஆண்டுக்கணக்கை மேற்கொண்டு காலக்கணக்கிடத் தொடங்கினர்கள்.

அக்காலத்திய கல்வெட்டுக்களின் நடையைக் காண்பிப்பதற்கு எடுத்துக் காட்டாக, இங்கு ஒன்று தருகிருேம். (இந்தக் கல்வெட்டு அறிஞர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் எழுதிய 'தென் இந்தியாவும் அதன்மேல் வந்த மகமதியப் படையெடுத்தோரும்' என்ற நூலில் கண்டது).

ஸ ஸி வ த ஸ்ரீ இராசராச இராசாதிராச சகல நிருவ குல (க்) கோனகாலம். இராசாக்கள் தம்பிரானுற்கு எாசுகஞு பங்குனிமீ" 5வ பொன்னமராபதி நாட்டு நாட்டவரோம் விரையாச்சிலே உள் இட்ட ஊரவருக்கும் கொட்டியூர் உள் இட்ட ஊரவருக்கும் பிடிபாடு பண்ணிக்கொடுத்த பரிசாவது:

இராசாக்கள் தம்பிரானுர் சூரைக்குடி அழியச் செய்வதாக மஞ்சிலிசு எலிசுகானை ஆசம்காத்தானை முவாசம்கான்கானை இராசாத்தி க(ர)னுடனே பரிகாரம் ஏவப்பட்டு சூரக்குடியும் அழியச்செயிது மாத்தூர் (க்) குளத்திலே விடுதியாவிரையாச்சிலே கோட்டியூர் ஊரவர்களை(க்)காணச்சொல்லி அருளிச்செய்தபடியாலே இவ்வடிகள் கண் அளிவுக்கு இராசாக்கள் தம்பிரானுர் தோனது கானுக்கும் எங்களுக்கும் பிரமாணம் வரக்காட்டி அருளினபடி முன்னுள் நம்முட பாராய் நமக்கு இறுத்துப்போந்த விரையாச்சிலே உள்ளிட்ட ஊரும் கோட்டியூர் உள்ளிட்ட ஊரும் தங்கள் நாட்டுடனே கூட்டி தங்கள் மரயாதி கடமை இருக்கக்கடவர்களென்றும் ஒன்றுபட நடத்திப் போதக்கடவர்களென்றும் இச்சேதிக்குத் திருக்கோளக்குடி நாயினுர் கோயில் திருமலேயிலே கல்வெட்டிக்குடுப்பதென்று பிரமாணம் வந்தபடியாலே நாங்களும் நாட்டுடனே கூட்டி எங்கள் மரியாதி கடமை இறுப்பதாக சந்திராதித்தவரை செல்வதாகக் கல்வெட்டிக்குடுத்தோம் பொன்னமராபதி நாட்டு நாட்டவரோம் விரையாச்சிலேயுள்ளிட்ட ஊரவருக்கும் கோட்டியூருள்ளிட்ட ஊரவருக்கும்.

இப்படிக்கு பொன்னமராபதி நாட்டுனு

இக் கல்வெட்டு இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருக்கோளக்குடி, திருக்கோளநாதசுவாமி கோவில் முன் மண்டபம் கீழ்புறச் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ளது. புதுக்கோட்டை, பழம் பொருளாராய்ச்சியாளர், ஸ்ரீ என். பி. சுவாமிநாதய்யரவர்களால், அறிஞர் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காருக்கு, இதன் படி உதவப் பெற்றது.

மதுரைச் சுலுத்தானிடம் அழிவுற்ற பின்னர் தென்னுட்டு மகமதியக் கூட்டம், மீண்டும் ஒரு மகமதிய ஆட்சியை, மதுரையைத் தலைநகராகவைத்துத் தொடரவேண்டும் என்று தில்லியில் செய்த முயற்சிகள் பலன்பெருது ஒழிந்தன.

காலத்தால் மிகமிகச்சுருங்கிய இந்த மதுரைச் சுலுத்தானியத்தின் வரலாறு நன்கு ஆராயத்தக்கதாகும். இந்த ஆராய்ச்சியால், மகமதியப் படையெடுப்பினுல் அழிந்த கோயில்கள், நிலேயங்கள், கலேகள், கல்வி முறைகள் முதலியனவற்றின் பண்டைய நிலேயைக் காணக்கூடும். இக்காலத்தைப்பற்றிப் பல செவிவழக்கான செய்திகளும், நாட்டுப்பாடல்களும் இன்னும் கிடைக்கக்கூடியனவே. இலக்கியப் பாட்டுகளும் சில உளவெனத் தெரிகிறது. இவர்கள் காலத்துச் சிறப்புற்றிருந்த பல துறைமுகப் பட்டினங்கள், உள்நாட்டுப் பட்டினங்கள் முதலியவற்றை எவை என உறுதிப்படுத்துவதும் வரலாற்றுக்குப் பயன்தருவதாகும். எடுத்துக்காட்டாக 'பட்டணம்'

**புலத்துறை முற்றிய பூவையர்** — ஆசிரியர் : வித்துவான் சிவ. பார்வதியம்மையார். கிடைக்குமிடம் :— சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1/140, பிராட்வே, சென்னை, 1. விலை: 2-4-0

இந்நூல் "புலமையும் பெண்மையும்" என்ற தலைப்பில் பண்டைத் தமிழக மகளிர் கல்வி கேள்விகளில் மேம்பட்டிருந்தமையையும் கற்பும் கல்வியும் உடைய காரிகையாற்றான் நாடு பீடுற இயலுமென்பதையும் தக்க மேற்கோள்களால் நிறுவி 'ஆதிமந்தியார்', 'காரைக்காலம்மையார்,' 'ஆண்டாள்' இவர்தம் வரலாறுகளை நூல்வழி நின்று ஆய்ந்து இனிய எளிய தமிழில் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் எழுதப் பெற்றதாகும்.

இந்நூலாசிரியர் நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின் திருமகளாவார். 'மகனறிவு தந்தையறிவு' என்னும் பொருண்மொழியை "மகளறிவு தந்தையறிவு" எனக்கூறவும் வாய்ப்பளிக்கின்றது இவர்தம் புலமை.

பொதுவாகத் தமிழன்பர்களும் சிறப்பாகத் தமிழ்மகளிரும் படித்துப் பயன்பெறவேண்டிய சிறப்புடைய இந்நூல் சிறுசிறு தலைப்புக்களில் கருத்துக்கள் கோவையாகவும் செம்மையாகவும் அமைந்து தெள்ளிய தீந்தமிழ் நடையிற் செல்வதால் பல்கலைக் கழகங்களிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடமாக அமைக்கத் தகுதியுடையது.

---

(379-ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது எது என்பதைப் பலவாறு கருதுகின்றனர்கள். இந்தப் பெயரால் சிறப்பாக வழங்கப்பெற்றது, தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிவீரராமன் பட்டினத்துக்கு அருகிலுள்ள 'மல்லிப்பட்டினம்' என்னும் கடற்கரைச் சிற்றூரே எனக்கொள்ளுவது உண்மைக்குப் பொருத்தமாகும். இது நிற்க.

மதுரைச் சுலுத்தான் வீழ்ச்சியடைந்தவுடன், அஞ்சி, கோட்டைக்குள் புகுந்து ஒடுங்கிய மகமதியக் கூட்டத்துக்கு, வீரகம்பண்ணன் அபயம் அளித்து, எவ்வித இடுக்கண்ணும் நேராது காப்பாற்றி, நிலைக்கச்செய்தான். மகமதிய ஆட்சியில் மறைபட்டும், இடிபட்டும், பாழ்பட்டும்போன கோயில்களையும், வழிபாடுகளையும், மீண்டும் தொடங்கிப் பண்டைய வழக்கப்படி தொடர்ந்து செய்துவரச்செய்தான். தமிழ்நாடு பண்டைய நல்நிலைமையை அடைவதற்காக முயன்ற கம்பண்ணனின் துணைவர்களில் கோபணாரியர், சாலுவ மங்கு, சோமப்ப தண்டநாயகன், கண்டரகூளி மாரப்ப நாயக்கன் முதலியோர் என்றும் நம்மவர்களால் நினைந்து பாராட்டத்தக்கவர்களாவர். இவர்கள் வரலாறெல்லாம் பார்க்கப் புகின், இயற்கையாகவே நீண்டுள்ள இம் மதிப்புரை, இன்னும் நீளுமாகலின், இங்கு ஆராயப்பெறவில்லை.

இந்த 'மதுராவிஜயம்' நல்ல முறையில் வெளிவந்துள்ளமைக்குத் தொண்டு செய்துள்ளோருக்கும், பல்கலைக் கழகத்துக்கும் நம் நன்றி உரித்தாகுக எனக் கூறி, இம் முறையில் பல நூல்கள் வெளிவர வேண்டும் என்றும், இந்நூலும் தமிழில் வெளிவரவேண்டும் என்றும் விண்ணப்பித்து நிற்கின்றோம்.

**அழுது அடியடைந்த அன்பர்** — ஆசிரியர்:— முதுபெரும் புலவர், பெருஞ்சொல் விளக்கனர் **அ. மு. சரவண முதலியார்** வெளியீடு: மணிவாசக மன்றம், வேளாளத் தெரு, அரியலூர். விலை **1-4-0**

ஒருகாலோதக் கருங்கன் மனத்தையும் கசிந்துருக்கி அன்பராக்கும் திருவாசகப் பெருந்தேனை அருளிய வாதவூரடிகளைப் பரஞ்சோதியார் தன் காப்பியமாகிய திருவிளையாடற் புராணத்துள்

"எழுதரு மறைக டேரு மிறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
**யழுதடி யடைந்த வன்ப** னடியவர்க் கடிமை செய்வாம்"

என் வணங்குமுகத்தான் ஏற்றிக் கூறிய பாவின் ஈற்றடியில் உள்ள 'அழுது அடி அடைந்த அன்பன்' என்ற தொடரைக்கொண்டு ஆளுடைய அடிகளின் வரலாறு, அவர்தம் அருளிச் செயல், அவரால் போற்றப்பெற்ற திண்ணனாராகிய கண்ணப்பர் பெருமை, பரஞ்சோதியார் தன் நூலுள் திருவாசகத்தைக் குழைத் திழைத்துத் தந்த அழகு—ஆயவற்றை விளக்கிப் பெருஞ்சொல் விளக்கனர் பன்முறை ஆற்றிய அருஞ்சொற்பொழிவுகளின் பிழிவே இந்நூல்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் திருவாசகத்துட் பொறுக்குமணிகளாகச் சில பாக்களை முன்பெற்றுப் பல தலைப்புக்களில் உலவாக் கருத்துக்களை அளவாகக் கூறிச் செல்லுகிறது இந்நூல். "அழுது அடியடைந்த அன்பர்" என்ற சொற்றொடரின் பொருளாய்வு கற்றவர் போற்றும் பெற்றியில் நற்றமிழ் நடையில் நயமாகக் கூறப்படுகிறது. திருவாசகத்தேனை நுகர்வாரும் பகர்வாருமேயன்றிச் சைவ, தமிழ் மக்கள் யாவரும் படித்து மகிழவேண்டிய இந்நூல் அடுத்த பதிப்பில் நல்ல தாளில் அச்சுப்பிழைகளின்றி வருதலை எதிர்நோக்கலாம்.

---

## கையறவு

நமது சங்கப் பேரன்பரும் தமிழறிஞரும் மைசூர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியருமான திரு. வித்துவான் S. உருத்திரபதி எம். ஏ. அவர்கள் 1958 பிப்பிரவரி 28-ஆம் நாள் மறைந்தமை கேட்டுப் பெருந்துயர் எய்துகிறேம். அவர் தம் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

பொழிற்றெண்டர்.

# அந்தாதி இலக்கியம்.

## திரு. அடிகளாசிரியர்.

செவிக்கும் சிந்தனைக்கும் இனிமையைத் தரும் செந்தமிழ் இலக்கியங்களுள் ஒரு பகுதியாகிய அந்தாதி இலக்கியத்தைப் பற்றியது இக்கட்டுரை. முதற்கண் இலக்கியம் என்றால் என்ன? எவை எவை இலக்கியமாகும்? என்பனவற்றைப்பற்றி ஆராய்வோம்.

எத்தொழிலைச் செய்யும் மக்களுக்கும் மனத்திலே ஓர் நல்ல இலக்கு வேண்டுமென்றும், அந்த இலக்கு சோம்பலைப் போக்கி மக்களை நல்வழிப்படுத்துமென்றும், மக்களுக்கேயன்றி இவ்வுலகத்தில் எல்லாப் பொருள்கட்கும் ஓர் இலக்கு உண்டென்றும் **பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்** கூறுகின்றனர். உலகத்திலுள்ள நூல்களெல்லாம் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய சிறந்த இலக்குகளைத் தம்மிடத்தே கொண்டுள்ளதால் அறிஞர் அவற்றை 'இலக்கியம்' என்று பெயர்வைத்தழைக்கின்றனர். இவ்விலக்கியத்தைப்பற்றி அறிஞர்களுக்குள்ளே சில கருத்து வேற்றுமைகள் உள்ளன.

மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய நூல்களே இலக்கியமாகுமென்றும், ஒரு சில குழுவினர் மட்டும் மிக ஊக்கத்துடன் ஆராயும் வான நூல், பொருளாதாரம், தத்துவம், வரலாறு முதலியவை இலக்கியம் ஆகாவென்றும் அறிஞர் **ஹட்சன்** (Hudson) கூறுகின்றார். ஆனால், **ஹாலம்** (Hallom) என்னும் அறிஞர் மேற்கருத்துக்கு மாறுபாடாக மருத்துவம், சட்ட நூல், சமய நூல், வான நூல் முதலியவைகளும் இலக்கியமே என்பர்.

நம் நாட்டு இலக்கண ஆசிரியராகிய **தொல்காப்பியர்** இலக்கியத்தை யாப்பென்று கூறி, அந்த யாப்பு பாட்டு, உரை, நூல், மந்திரம், பிசி. அங்கதம், முதுசொல் என்னும் எழுவகையாக இயன்று **குறித்த பொருளை முடிய நாட்டும்** (தொல்-பொரு-செய்) என்று கூறியுள்ளனர்.

இவ்வெழுவகை இலக்கியங்களுள் பாட்டென்னும் இலக்கியமே மிகச் சிறந்த இலக்கியமாகும். இவ்விலக்கியம் தமிழிற் பல வகையாய் அமைந்துள்ளது. அவ்வகையுள் ஒன்று அந்தாதி இலக்கியமாகும். அந்தம் என்றால் ஈறு; ஆதி என்றால் முதல்; ஒன்றன் ஈறு மற்றொன்றிற்கு முதலாய் அமையப் பாடுவது அந்தாதியாகும். இதனை அந்தாதித் தொடை யமைந்த தனிச் செய்யுளென்றும், அந்தாதியான நூலென்றும் இருவகையாகப் பிரித்துக்கொள்ளலாம்.

ஒரு அடியின் ஈற்றிலுள்ள எழுத்து சொல் என்பனவற்றில் ஏதாவதொன்று அடுத்த அடிக்கு முதலாய் வரப் பாடினால் அது அந்தாதித் தொடை அமைந்த தனிச்செய்யுளாகும். இதனை,

"உலகுடன் விளக்கு மொளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்"

என்னும் செய்யுளால் அறிக.

ஒரு பாட்டின் ஈற்றிலுள்ள எழுத்து, சொல் என்பனவற்றில், ஏதாவதொன்று அடுத்த பாட்டிற்கு முதலாய் வரப்பாடிய செய்யுட் டொகுதி அந்தாதி என்னும் நூலாகும். இதனைப் புலவர் சொற் றொடர் நிலை இலக்கியம் என்று புகல்வர். இவ்விலக்கியத்தின் ஈற்றுச் செய்யுளிலுள்ள ஈற்றுச்சொல்லும், முதற் செய்யுளிலுள்ள முதற் சொல்லும் ஒத்து முடிந்திருக்கும். இதனை மண்டலித்து முடிதல் என்று அறிஞர் கூறுகின்றனர்.

கலம்பகம், மும்மணிக் கோவை, இரட்டை மணிமாலை, இணை மணிமாலை, மும்மணி மாலை, நான் மணி மாலை, நவ மணி மாலை, பன்மணி மாலை, ஒருபாவொருபது, இருபா விருபது, அட்ட மங்கலம், அலங்கார பஞ்சகம் முதலிய சிறு நூல்களெல்லாம் அந்தாதி அமை யப் பாடப்படுவது வழக்கமாயினும் இவற்றை அந்தாதி என்று வழங்கும் வழக்கமில்லை. ஒலியலந்தாதி, பதிற்றுப் பத்தந்தாதி, நூற்றந்தாதி என்னும் இவற்றையே அறிஞர் அந்தாதி என்று வழங்குகின்றனர். அந்தாதி என்னும் நூல் சங்கிலிபோல் தொடர் பாக அமைந்துள்ளதால் மனப்பாடம் செய்பவர்களுக்கு அது ஏற்ற தாயிருக்கின்றது.

நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் திருவாய்மொழி முற்றிலும் அந்தாதியாகவே உள்ளன. அப்பிரபந்தத்துள் முதற்றிருவந்தாதி முதலான பல அந்தாதி நூல்கள் இருக்கின்றன.

அந்தாதியாய் நூல் செய்யும் வழக்கம் வடமொழியில் இல்லை என்றும், ஆனால் தமிழிலுள்ள எதுகை, மோனை முதலிய தொடைகள் அமையும்படி **வேதாந்த தேசிக** ரென்பார் வடமொழியில் நூல்கள் இயற்றியுள்ளாரென்றும் வடமொழி வல்லார் கூறுகின்றனர்.

சைவத் திருமுறைகளுள் திருவாசகத்திலே திருச்சதகமும், நீத்தல் விண்ணப்பமும் அந்தாதியாக அமைந்தனவே. பதினோராந் திருமுறையுள் எட்டு அந்தாதி நூல்கள் இருக்கின்றன.

இப்பொழுது உள்ள நிகண்டு நூல்களுள் பழமையுடையதாகக் கருதப்படும் திவாகரத்தைச் செய்வித்த **அம்பற் சேந்தன்** என்பார் உமாதேவியைக் குறித்து ஓர் அந்தாதி நூல் ஒன்று செய்துள்ளா ரென்று அந்நூற் பாயிரத்தால் புலனாகின்றது. (திவா—9) அவ்வந் தாதி நமக்குக் கிடைக்கவில்லை. 'கோவை யுலா அந்தாதிக் கொட்டக் கூத்தன்' என்னும் தனிப் பாடலால் அந்தாதி பாடுவதில் **ஒட்டக் கூத்தர்** மிகச் சிறந்தவர் என்பது தெரிகின்றது. ஆனால், அவர் பாடிய அந்தாதியொன்றும் இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை.

இன்னும் கடவுளர் எழுந்தருளியிருக்கும் பல இடங்களைப்பற்றியும், பல வள்ளல்களைப்பற்றியும் அகப்பொருட் செய்தியும் புறப்பொருட் செய்தியும் தோன்ற வெண்பாவாலும் கட்டளைத் கலித்துறையாலும் புலவர் பலர் அந்தாதி நூல்கள் செய்துள்ளனர். இவ்வந்தாதிகளி லிருந்து சிறந்த கருத்துக்களையும், சுவையான பகுதிகளையும் இனிக் காண்போம்.

குணங்களில் மிகச் சிறந்தது அருள் என்னும் குணமாகும். அது மக்களுடைய அருள் கடவுளுடைய அருள் என்று இரண்டு வகையாயிருக்கும். மக்களிடத்திலுள்ள அன்பு என்னும் குணமானது அவர்கள் அறச் செயலை மேற்கொண்டபொழுது அருள் என்னும் பேரிரக்கமாக மாறுகின்றது. வேற்றுமை பாராட்டாமல் எல்லா வுயிர்க்கும் இரங்குகின்ற அருள் என்னும் குணத்தைப் பொருள் என்பது வளர்த்து விடுகின்றது. அன்பு, அறம், பொருள் என்னும் அடிப்படையில் தோன்றிய அருள் என்னும் குழந்தையைப் பெற்ற வருக்குத்தான் மறுமைப் பயன் கிட்டுமென்று மக்கள் அருளைத் திருவள்ளுவர் அழகாகக் கூறியுள்ளார்.

உயிர்களுக்குக் கடவுள் செய்கின்ற சிறந்த உபகாரத்தைக் கருதும்பொழுது கடவுள்மேல் நமக்கு அயராத அன்பு உண்டா கின்றது. அந்த அன்பு நம் மனத்தில் முதிர முதிர ஆண்டவன் திருவருள் நம்மேல் பதிகின்றது. இவ்வருளின் சிறப்பைப்பற்றியும், அதனால் விளையும் பயனைப்பற்றியும் காரைக்கால் அம்மையார் தாமியற்றிய அற்புதத் திருவந்தாதிச் செய்யுளொன்றில் கூறுகின் றனர்.

ஈசன் அருளே உலகத்தையெல்லாம் ஆளச்செய்யும்; ஈசன் அருளே உயிர்களின் பிறவி நோயை முற்றிலும் நீக்குமென்று கடவுள் அருளின் சிறப்பை உணர்ந்து, ஈசனிடத்தில் அயராத அன்பைச் செலுத்தி. அவனது திருவருளை யான் பெற்றால் அவ் அருட்கண்ணால் உண்மைப் பொருளை அறியும் நல்வினையைப் பெற்றேனாவேன்; இவ்வுலகத்திலே எல்லாப் பொருளும் எனக்குக் கைகூடும்' என்கின்றனர்.

"அருளே உலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல் — அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னென்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு"

(அற்புதத் திருவந்தாதி-9)

(தொடரும்)